# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 59வது கூட்டறிக்கை 2023.02.21

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 59வது அமர்வு 2023.02.21 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ தவிசாளர் | ஐ.தே.க |
| 02. | ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. | ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. | ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 05. | ஜனாப்.எம்.ஏ.தம்பிக்கண்டு | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. | ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. | ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. | ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 09. | ஜனாப்.ஏ.ஏ.சீ.எம்.நிசாம் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. | ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 11. | திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. | திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. | ஜனாப்.ஏ.எச்.அன்வர் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 14. | ஜனாப்.ஏ.எம்.நபீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. | திருமதி.ஏ.பீ.ஏ.சஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 59வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

முதலாவது விடயமாக துருக்கி நாட்டில் இடம்பெற்ற அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவுக்காக அம் மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் சபையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ் அமர்வின் அடுத்த அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இறைவனின் உதவியால் இந்த சபையின் இறுதி காலகட்டத்தில் தலைமை தாங்க வேண்டிய பொறுப்பு என் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. அதற்காக முதற்கண் இறைவனுக்கும் தெரிவு செய்த

ஏனைய சக உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். ஊரைப் பொறுத்தவரையில் தற்போது இருக்கின்ற ஒரே ஒரு அரசியல் அதிகாரம் இந்தப் பிரதேச சபை மாத்திரம் தான். எனவே அதையும் இழந்து விட்டு ஊரை அனாதையாக்க சிலர் முயற்சி செய்தார்கள். இறைவனின் உதவியால் முறியடிக்கப்பட்டு ஊரின் அரசியல் அதிகாரம் இந்த பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இந்த அமானிதத்தை செவ்வனே நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இந்த பிரதேச சபையின் பொறுப்பாக இருந்து கொண்டிருக்கின்றது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஊரை துவம்சம் செய்வதற்கும், ஊரில் உள்ள சில சொத்துக்களை வெளியூர்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் பல முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதை இயலுமான வரைக்கும் இந்த சபை கட்சி பேதங்கள் இல்லாமல் ஊரின் ஒரு அரசியல் அதிகாரம் உள்ள சபையாக அதை தடுக்க வேண்டிய பொறுப்பு இந்த சபையிலே இருக்கின்ற கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கின்றது. அதனை இந்த நிகழ்ச்சி நிரலில் ஒழுங்கின்படி சில விசேட பிரேரனைகள் நிறைவேற்ற வேண்டி இருக்கின்றது. அதை உங்களது அங்கீகாரத்திற்காக தருவேன் என்று கூறி, டிசம்பர் மாதம் கூட்டம் நடைபெற்றது அதன் பின்னர் இந்த வருடத்தின் ஜனவரி மாத கூட்டம் கௌரவ முன்னாள் தவிசாளர் அவர்களின் இராஜினாமாவை தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இன்றைய அமர்விலே கடந்த காலம் நிறைவேற்றப்பட வேண்டிய செய்ய வேண்டிய சில விடயங்கள் தேங்கி நிற்கின்றது. அவற்றுக்கு கூடுதலான நேரங்கள் செலவளிக்க வேண்டி இருப்பதனால், அடுத்த விடயமாக இந்த சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட கௌரவ உறுப்பினர்களின் உரை. அதிலே கௌரவ உறுப்பினர் நிசாம் அவர்களை உரையாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.ஏ.சீ.எம். நிசாம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த அமர்வுக்கு கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்த இறைவனுக்கு முதற்கண் நன்றி செலுத்துகின்றேன். இற்றைவரை தேர்தல் நடைபெற்று கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும், ஆட்சி அதிகாரங்கள் காலாவதியாகி தப்பிப் பிழைத்து வந்த நிலையிலும், இருக்கின்ற காலம் ஒரு நாளோ இரண்டு நாளோ என்று எதிர்பார்த்த நிலையிலும் இந்த சபையிலே உரையாற்ற கிடைத்ததற்கு மீண்டும் அல்லாஹ்வுக்கு நன்றியை தெரிவிக்கின்றேன். தனிப்பட்ட முறையிலே இப்பதவிக்கு வராமல் இருந்திருக்கலாம். இருந்தாலும் ஊரின் நன்மை கருதி ஒரு நாளாவது சேவை செய்ய வேண்டும் என்று இன்று வந்துள்ளேன். எனக்கு கன்னியுரை என்றாலும் ஐந்து வருடங்களுக்கு முதல் தவிசாளர் அவர்களுக்கு எதிராகத்தான் நாங்கள் பிரச்சாரம் செய்து கேட்டிருந்தோம். எனது உறவினர் நேற்று திடீரென்று மரணித்து விட்டார். நான் சபைக்கு வருவதா என்று இருந்த போதிலும் சமூக சேவைக்காக வரவேண்டும் என்றுதான் வந்திருந்தேன். முதலாவது தவிசாளர் அவர்களுக்கு அல்லாஹ்வின் அருள் கிடைக்க வேண்டும். அதிகமான விடயங்கள் செயற்படுத்த வேண்டும் என்று நான் தீர்மானித்திருந்தும் காலம் கிடைக்கவில்லை. முக புத்தகங்களிலும் கௌரவ தவிசாளர் சில வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதை நான் பார்த்திருக்கின்றேன். இன்ஷா அல்லாஹ் உங்களது நல்ல செயல்களுக்கு தொடர்ந்து என்னாலான உதவிகளை செய்வேன் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம். நபீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நான் 2006 ஆம் ஆண்டு வெற்றிலை சின்னத்தில் இப்பிரதேச சபைக்கு போட்டியிட்டு ஒரு சில வாக்குகளால் தோல்வியிட்டு இந்த பிரதேச சபைக்கு வருவேனா என்ற நிலைப்பாட்டில் இருந்தேன். முதலில் ACMC கட்சி தலைவருக்கும், ACMC கட்சிக்கும் தான் நன்றி கூற வேண்டும். அடுத்ததாக இந்த இடத்திற்கு என்னை நியமித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, அதனோடு இந்த சபைக்கு நான் வருவதற்கு அல்லாஹ் என்னுடைய தலையில் எழுதி இருக்கின்றான். நான் தேவையில்லை என்று சொன்னேன் ஆனால் தலைவர் ஒரு நாளைக்காவது சென்று நீங்கள் ஒப்பமிட வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இணங்க இந்த சபைக்கு நான் வந்திருக்கின்றேன். என்னை பொறுத்த வரைக்கும் இந்த ஊர் ஓர் அனாதையான ஊராக இருந்து கொண்ட நிலையில் பிரதேச சபை மட்டும் தான் இந்த ஊரில் ஒரு ஆட்சி அதிகாரங்களைக் கொண்ட சபையாக இருந்து கொண்டிருக்கின்றது.

அதிலும் முன்னாள் தவிசாளர் இராஜினாமா செய்ததன் பின்னர் ஒரு தவிசாளர் இல்லாமல் இந்த சபை இயங்காமல் இருந்த நிலையில் ACMC கட்சியின் ஊடாக ஒரு சபை அமைக்கப்பட வேண்டும் என்று பல வியூகங்களை விதித்து இந்த சபையை அமைத்திருக்கின்றோம். இந்த சபையை பொறுத்தவரையில் சிலர் சபையில் தவிசாளர் வரக்கூடாது என்ற நிலைப்பாட்டையும் கொண்டிருந்தார்கள். அதையும் தாண்டி இந்த சபைக்கு உங்களை தவிசாளராக தெரிவு செய்து இந்த சபையை நடத்திக் கொண்டிருக்கின்றோம். ஆகவே நாங்கள் இந்த சபை ஒரு நாளோ அல்லது இரண்டு நாளோ தெரியாது. ஒரு காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.முகைதீன் அவர்கள் Deputy Minister பதவி எடுத்து வீட்டுக்கு வருவதற்கு முன் பாராளுமன்றம் கலைந்த சரித்திரமும் இருக்கின்றது. அதே போல் இந்த அமர்வுக்கு பின்னர் நாங்கள் வீடு செல்வதற்கு முன்னர் சபை கலைந்தாலும் கலையலாம். ஆகவே நாங்கள் இந்த சபை இருக்கும் வரைக்கும், நாங்கள் இருக்கும் வரைக்கும் கௌரவ தவிசாளருக்கு எங்களால் இயன்ற உதவிகளை செய்து இந்த சபையை நடாத்தி செல்வதற்கு உறுதி கூறி, எனது கன்னியுரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ஏ.தம்பிக்கண்டு அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முதற்கண் இந்த சபையில் ஒரு அங்கத்தவராக நான் தெரிவு செய்யப்படுவதற்கு அல்லாஹ் நாடியிருக்கின்றான். அதற்காக முதற்கண் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்தவனாகவும், இந்த அங்கத்துவப் பதவியை என்னைப் போன்று சகோதரர்கள் இரண்டு பேர் பங்கெடுப்பதற்கு உதவி செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸினுடைய தலைவர் கௌரவ முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களுக்கும் நான் இந்த சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். என்னைப் பற்றி இங்குள்ள கௌரவ தவிசாளர் உட்பட ஏனையவர்களுக்கு நன்றாக தெரியும். இருந்தாலும் ஒரு சபையில் முதல் தரத்தில் சுய விளம்பரம் அல்லது Self Introduction என்று சொல்வார்கள். அந்த வகையில் இந்த சபைக்கு நான் இரண்டாவது முறையாக வந்திருக்கின்றேன் என கூறிக் கொள்ள விரும்புகின்றேன். முதல் தரம் 2006ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தெரிவாகி சபையின் உப தவிசாளராக இருந்திருக்கின்றேன். இந்த ஆண்டுக்கான சபைக்கான தேர்தலில் போட்டியிட்டு தற்போது நான் அங்கத்தவராக வந்திருக்கின்றேன். என்னைப் பற்றி அதிகமாக தம்பிக்கண்டு சேர் என்றுதான் அழைப்பார்கள். அதற்கான விளக்கத்தை தருவது என்றால் நான் கிட்டத்தட்ட மகா வித்தியாலயத்தில் 25 வருடங்களுக்கு கூடுதலாக ஆசிரியராகவும், மூன்று வருடங்கள் அதிபராகவும், அதன் பின்னர் கல்வி அதிகாரியாகவும் கடமை புரிந்துள்ளேன். இப்போது ஓய்வு பெற்ற ஓர் அரச உத்தியோகத்தராக இருக்கின்றேன். அந்தக் காரணத்தினால் என்னைப்பற்றி இந்த ஊர் அதிகமாக அறிந்திருக்கின்றது.

அத்தோடு சமூக சேவையில் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையில் கிட்டத்தட்ட 18 வருடங்கள் அங்கத்தவராக இருந்திருக்கின்றேன். கிட்டத்தட்ட 15 வருடங்கள் நம்பிக்கையாளர் சபையினுடைய பொருளாளராக இருந்து இந்த ஊருக்கு நிறைய சேவை செய்திருக்கின்றேன். நான் பொருளாளராக இருந்த காலத்தில் இந்த ஊரில் 1989, 1990, 1991 காலப்பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக இந்த ஊர் பல கஷ்டங்களை அனுபவித்தது. அந்த கஷ்டங்களுக்கு எல்லாம் முகம் கொடுத்தது சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை. அந்த சபையினுடைய பொருளாளராக இருந்து நான் வெளிப்படையாகவும் மக்களுக்கு தெரியாத வகையிலும் பல உதவிகளை இந்த ஊரினுடைய பாதுகாப்புக்காக செய்துள்ளேன்.

அது போல் அரசியலில் நான் 2000 ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு இருக்கின்றேன். அதற்குப் பின்னர் 2006 ஆம் ஆண்டு பிரதேச சபை தேர்தலிலும் 2017 ஆம் ஆண்டு பிரதேச சபை தேர்தலிலும் போட்டியிட்டு இருக்கின்றேன். மேலும் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தை கூற விரும்புகின்றேன். எங்களுடைய இந்த பிரதேச சபையினுடைய மணப்பெண்ணுக்கு சென்ற 14ஆம் திகதி புது மாப்பிள்ளையை நாங்கள் யானை மேல் ஏற்றி கொண்டு வந்தோம். பல தடைகள் ஏற்பட்டன. அந்தத் தடைகள் எல்லாம் உடைத்தெறிந்து தவிடு பொடியாக்கி எங்களுடைய மாப்பிள்ளை என்று சொல்லப்படுகின்ற தற்போதைய தவிசாளர் அவர்கள் இங்கு 14 ஆம் திகதி பதவியேற்றார். இந்த பதவியேட்புக்கு உதவிய அனைத்து அங்கத்தவர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில்

நன்றி கூற விரும்புகின்றேன். மேலும் இந்த ஊரினுடைய தேவைகள் பல இருக்கின்றன அந்த தேவைகளை எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் அப்போது கூறிக்கொள்ள ஆயத்தமாக இருக்கின்றேன். இத்தோடு என்னுடைய இந்த ஆரம்ப உரையை நிறுத்தி உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன் எனக்கு வாய்ப்பு தந்த கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன் வஸ்ஸலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அடுத்ததாக சபைக்குரிய மனுக்கள், கடிதங்கள், முறைப்பாடுகள் பரிசீலித்தல். இதுவரைக்கும் சபைக்கு மூன்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அதில் ஒன்று தொலைத்தொடர்பு கோபுரம் சம்பந்தமாக பொதுமக்களின் முறைப்பாடு. தற்போது நடைமுறையில் இருக்கின்ற ஒரு தொலைத்தொடர்பு கோபுரத்தை அந்த இடத்தில் இருந்து அகற்றுவதற்கு அப் பிரதேச மக்கள் முறைப்பாடு செய்திருக்கின்றார்கள். இதனையும் அடுத்ததாக நாளாந்த சந்தை காசு அறவீடு சம்பந்தமாக சீர்படுத்தித் தருமாறு 25 வியாபாரிகள் கையொப்பமிட்டு ஒரு கடிதம் அனுப்பி இருக்கின்றார்கள். இது சம்பந்தமாகவும் பொது சந்தையில் மீன் விற்பனை பகுதியை விரிவுபடுத்தி தருமாறு அதிலும் 25, 26 வியாபாரிகள் கையொப்பமிட்டு முறைப்பாடு தந்திருக்கின்றார்கள். இந்த முறைப்பாடுகளை விசாரித்து இதற்கு எவ்வாறு நாங்கள் தீர்வு காண வேண்டும் என்று அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மூன்று பேர் கொண்ட குழுவை நியமித்தால் நல்லது என்று நினைக்கின்றேன். கௌரவ உப தவிசாளரின் தலைமையில் கௌரவ உறுப்பினர் ரியாஸ், கௌரவ உறுப்பினர் சிஹாமா ஆகிய மூன்று பேரும் இணைந்து மிக விரைவில் ஒரு கிழமைக்குள் இதைப் பற்றி விசாரித்து இதற்காக என்ன செய்யலாம் என்று சிபாரிசு செய்யுங்கள்.

## தீர்மானம் - 04/59/01

நிதி உதவியாளர் இடமாற்றம் காரணமாக நிதிப் பிரிவில் கடமையாற்றும் திருமதி: I.K.S. நஜீமா என்பவரை நிதி உதவியாளராக நியமிப்பதற்கும், சபையின் காசோலைகளுக்கு 2வது ஒப்பமிடுவதற்கும், நிதி உதவியாளருக்குரிய மாதாந்த Allowance ரூபா 1500.00 வழங்குவதற்குமான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## தீர்மானம் - 04/59/02

தெரு விளக்குகள், பிரகாசமான LED பல்ப், மின் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மிகவும் பாரதூரமான விடயம் ஒன்று சம்மாந்துறையிலே இடம் பெற்றிருக்கின்றது. அரச காணிகள் வெளியூர்களில் இருக்கின்ற வியாபாரிகளுக்கு வழங்குவதற்காக கடந்த கிழமை உதவி அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர் மூலம் சில அரசியல்வாதிகள் அரசாங்க அதிபரை சந்தித்து ஆலையடி வட்டையிலே 5 ஏக்கரையும் இன்னும் 2 ஏக்கரையும் அவர்களுடைய பயன்பாட்டுக்காக ஒதுக்கி இருப்பதாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இன்று இந்த சபையிலே நாங்கள் ஒரு காத்திரமான

தீர்மானத்தை எடுக்க வேண்டி இருக்கின்றது என்னவென்றால் சம்மாந்துறையில் இருக்கின்ற அரச காணிகளை சம்மாந்துறையின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக மாத்திரம் பயன்படுத்த வேண்டும். அத்துடன் பிரதேச சபை, நம்பிக்கையாளர் சபை, ஜம்இய்யதுல் உலமா சபை, அஷ்ஷூறா சபை போன்றவர்களுடன் கலந்தாலோசித்து செயற்பட வேண்டும் என்றும் கட்சி பேதம் இல்லாமல் இந்த சபையிலே ஏகமனதாக தீர்மானம் எடுத்து, அதனை எங்களது பிரதேச செயலாளருக்கும், மாவட்ட செயலாளருக்கும், அமைச்சருக்கும் அனுப்பி வைப்பதற்கு சபையின் அனுமதியை கோருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.நபீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அரச காணி சம்மந்தமாக ஏகமனதான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு முதல் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையினால் அரசகாணி சம்பந்தமாக சம்மாந்துறை பிரதேச செயலாளர், சம்மாந்துறை LO இருவர்களையும் அழைத்து அதில் ஐந்து நிறுவனங்கள் காணிகளுக்கு விண்ணப்பம் செய்தார்கள். அதில் பைசால் காசிம் MP அவர்களும் விண்ணப்பம் செய்தார். வில் சங்க உரிமையாளர்களும் ஒரு விண்ணப்பம் செய்தார்கள். நபீல் என்பவரும் விண்ணப்பம் செய்தார். நாங்கள் பரிசீலித்து பிரதேச செயலாளர், சம்மாந்துறை LO இருவர்களையும் அழைத்து நம்பிக்கையாளர் சபை சொன்னது என்னவென்றால் சம்மாந்துறையில் அரச காணி என்று இருக்கின்ற காணி பாம் வட்டை மட்டும்தான். ஆகவே எமது ஊருக்கு அரச நிறுவனங்களால் ஏதாவது வேலை திட்டங்கள் வந்தால் எமது பகுதிகளில் அரசகானிகள் இல்லை. ஆகவே நம்பிக்கையாளர் சபை பிரதேச செயலாளரிடம் வேண்டிக்கொண்டது என்னவென்றால் நீங்கள் அரசகாணியை யாருக்கும் பகிர்ந்து அளிப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பிரதேச செயலாளருக்கும் கடிதம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்க அதிபருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. 07 ஏக்கர் காணி அனுமதி வழங்கப்பட்டதாக தவிசாளர் அவர்கள் இந்த சபைக்கு அறிவித்தார்கள். நாம் எடுத்த தீர்மானத்தோடு நம்பிக்கையாளர் சபையும் எடுத்த தீர்மானத்தையும் சேர்த்துக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அரசகாணி என்கின்ற விடயத்தில் சபை இருக்குமாக இருந்தால் இன்னும் ஒரு மாதம் இருக்கும் ஆனால் கலையுமாக இருந்தால் கேள்விக்குறி. ஆனால் இன்று நாம் ஒரு தீர்க்கமான தீர்மானம் எடுக்க வேண்டும். சம்மாந்துறை பிரதேச செயலக, பிரதேச சபை எல்லைக்குட்பட்ட எந்த விதமான அரச காணிகளையும் நீண்ட நாள் குத்தகை அடிப்படையில் வழங்கக்கூடாது என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும். சம்மாந்துறையினுடைய அபிவிருத்தி தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

**தீர்மானம் - 04/59/03**
சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அரச காணிகளை நீண்டகால குத்தகைக்கு வழங்கும் போது சம்மாந்துறையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டும் என்றும் பிரதேச சபை, நம்பிக்கையாளர் சபை, ஜம்இய்யதுல் உலமா சபை, அஷ்ஷூறா சபை போன்றவர்களுடன் கலந்தாலோசித்து செயற்பட வேண்டும் என்று பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளர் மற்றும் உரிய அமைச்சிற்கும் கடிதம் அனுப்புவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
ஏனைய பிரேரணைகள் என்கின்ற விடயத்தில் பேச வேண்டிய முக்கியமான விடயம் அம்பாறை மாவட்டத்தில் அதி கூடிய விவசாயிகளைக் கொண்டு அதி கூடிய நிலப்பரப்புகளையும் கொண்டு சீரழிந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் 100.00 ரூபாவுக்கு ஒரு கிலோ நெல் வாங்குவது என்று

கௌரவ ஜனாதிபதி அவர்கள் சரியான கணக்கீடு செய்யாமல் கூறியிருக்கின்றார். ஆனால் 150.00 ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்ய வேண்டும் என்று இந்த சபை தீர்மானத்தை கொண்டு வர வேண்டும். விவசாயிகளுக்கு தோல் கொடுக்க வேண்டும். நெல்லின் உத்தரவாத விலையினை நாங்கள் தீர்மானித்து அனுப்ப வேண்டும். 150.00 ரூபாவுக்கு கொள்வனவு செய்தால்தான் விவசாயிகள் பாதுகாக்கப்படலாம். இது தொண்டு தொட்ட காலத்தில் இருந்து விவசாயிகளுக்கான பட்டம் வழங்கினது கூட அம்பாறை மாவட்டம் தான். விவசாய மன்னர் டட்லி சேனநாயக்க அவர்களின் காலத்தில் கூட உங்களது சகோதரருக்கு விவசாய மன்னன் என்ற பட்டம் வழங்கப்பட்டு பவுன் அளவில் மோதிரம் கொடுத்த சரித்திரமும் இருக்கின்றது. அப்படிப்பட்ட ஊரில் விவசாயம் சீரழிந்து கொண்டிருக்கின்றது. நாம் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கின்றோம் எமது ஊரின் முதுகெலும்பான விவசாயத்திற்கு உயிரூட்டுவது சம்பந்தமாக மறைக்கார் சபை எல்லாரும் சேர்ந்து அதிகாரம் கொண்ட இந்த சபையில் இது சம்மந்தமாக எத்தனை மணித்தியாலயம் எத்தனை வினாடி வேண்டும் என்றாலும் பேசி மழை காலத்தில் எவ்வளவு, வெயில் காலத்தில் எவ்வளவு விலை என்று விவசாயிகள் எவ்வாறு கஸ்டப்படுகின்றார்கள் என்று நாம் பேட்டிகளில் பார்க்கின்ற போது மிகவும் துன்ப நிலையில் இந்த விவசாயம் இருக்கின்றது. எனவே நாங்கள் ஒரு உத்தரவாத விலையை 150.00 இற்கு கொள்வனவு செய்ய வேண்டும் என்று ஏகமனதாக தீர்மானம் எடுக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சம்மாந்துறை மாத்திரமல்ல இந்தப் பிராந்தியம் முழுவதும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஊராகத்தான் இருக்கின்றது. எங்களது பொருளாதாரத்தின் முதுகெலும்பு விவசாயம். விவசாயிகள் படுகின்ற கஷ்டங்கள் சொல்லொன்னா கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே அவர்களுக்கு ஒரு உத்தரவாத விலையை நிர்ணயிக்க வேண்டும் நிர்ணயித்திருக்கின்ற விலை உண்மையாக காணாமல் இருக்கின்றது. தற்போது உற்பத்தி செலவுகள் கூடுதலாக இருக்கின்றது. அறுவடை செலவுகள் கூடுதலாக இருக்கின்றது. அதிலும் காலநிலை இடம் கொடுக்காமல் மழை காலம் வந்தால் இன்னும் மோசமான செலவுகள் கூடிய அறுவடையாகத்தான் இருக்கின்றது. எனவே இந்த உயர்ந்த சபையில் ஏகமனதான ஒரு தீர்மானத்தை எடுத்து அரசாங்கத்திற்கு நாம் அறிவிப்போம் நெல்லின் உத்தரவாத விலையை உயர்த்தி 150 ரூபாய் ஒரு கிலோவாக அரசாங்கமே கொள்வனவு செய்யவும் வேண்டும். விலையை மாத்திரம் நிர்ணயித்து விட்டு கொள்வனவு செய்யாமல் விட்டால் விவசாயிகள் மிகவும் கஷ்டத்தில் இருப்பார்கள். எனவே நிர்ணயிக்கப்பட்ட வேலையை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும் என்று இந்த சபையிலே ஏக மனதான ஒரு பிரேரணையை நிறைவேற்றி உரிய அமைச்சிற்கும், அரசாங்கத்திற்கும் அறிவுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நெல்லின் விலையை 150.00 ரூபாவாக உயர்த்த வேண்டும் என்று சொல்லுகின்றீர்கள் ஏற்றுக் கொள்கின்றேன். விவசாயிகளுக்கு செலவீனம் கூடுதலாகத்தான் இருக்கின்றது. காணி ஒரு லட்சத்திற்கு குத்தகைக்கு எடுப்பது அரசாங்கத்திற்கு தெரியாது. அரசாங்கத்தின் கணக்கு 2 ½ ஏக்கர்தான் ஒரு குடிமகனுக்கு காணி. அதற்கு முப்பது லீட்டர் டீசல் இலவசமாகவும், பசளை இலவசமாகவும், பத்தாயிரம் ரூபா பணமும் தரப்போகின்றார்கள். அவ்வளவும் தந்தால் 100 ரூபா நியாயமான விலை. வாங்கி சாப்பிடுபவர்களையும் யோசிக்க வேண்டும். உங்களிடம் 60, 70 ஏக்கர் காணியை வைத்துக்கொண்டு 110,000.00 குத்தகை கொடுக்க வேண்டும் என்றால் ஏழைகளைப் பற்றியும் யோசிக்க வேண்டும். இலங்கையிலே நெல்லின் கூடுதலான விலை சம்மாந்துறையில் மாத்திரம் தான். தற்போது அக்கரைப்பற்றில் நெல்லில் விலை 5000.00 ரூபா. சம்மாந்துறையில் 5200.00 ரூபா. அரசாங்கம் சொல்வது நியாயமான விலை. நீங்கள் 100,000.00 ரூபா கொடுத்து காணியை எடுப்பதற்கு அரசாங்கம் பத்திரவாதில்லை. எல்லா பொறுப்பையும் அரசாங்கத்திடம் விடக்கூடாது.

அத்துடன் கௌரவ தவிசாளர் அவர்களே, அம்பாறை இரண்டாம் வட்டாரம் 12, 17ஆம் வீதிகள் மோசமாக காணப்படுகின்றது. அதனை நேற்று வந்து பார்வையிட்டீர்கள் அதையும் கவனத்தில் எடுக்குமாறு பணிவாக கேட்டுக் கொள்கின்றேன். அத்தோடு மல் 10 ஆம் வீதி நான் வசிக்கின்ற

இடம். மன்சூர் அவர்கள் தவிசாளராக இருந்த காலத்தில் இரண்டு Dump Rack கிரசர்தூள் தந்தார். முன்னாள் தவிசாளர் அவர்கள் ஒரு தடவை ஒரு Dump Rack தந்தார்கள். இந்த முறை செயலாளர் இரண்டு வண்டில் கிரசர் தூள் தந்தார். நான் வீதி கேட்டால் கிரசர் தூள்தான் தான் வரும் தயவுசெய்து நீங்கள் இருக்கின்ற காலத்திலாவது அதை கவனத்தில் எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நான் ஒரு விவசாயி சிறந்த உழவருக்கான விருதினை பெற்றவன். தங்கப்பதக்கம் எடுத்திருக்கின்றேன். ஒரு 08 ஏக்கர் 2 ¼ ஏக்கர் கடைசி வரை அந்த செலவை ஈடு செய்ய இயலாது. 2 ¼ ஏக்கருக்கு நாங்கள் போடுகின்ற செலவை குத்தகையை மட்டும் கழித்தாலும் மற்றதை ஈடுசெய்ய இயலாது. நூறு ரூபாவுக்கு ஒரு கிலோ நெல் விற்கப்படுமானால் எங்களால் தாக்கு பிடிக்க இயலாது. அதற்காக ஏழைகள் பிழைக்க இயலாது என்றதை நாங்கள் சொல்லவில்லை. ஏழைகளும் பிழைக்கத் தான் வேண்டும். பழைய மாதிரி ஒரு ஏக்கருக்கு 40, 50 மூடை விளைச்சல் கிடைப்பதில்லை. தற்போது 25 அல்லது 30 மூடைதான் விளைகின்றது. அதற்கு குறைவாகவும் விளைகின்றது. ஆகவே ஒரு கிலோ நெல்லிற்கு 150.00 ரூபா அல்லது 100.00 ரூபாய்க்கு இடையில் சென்றால்தான் நமது செலவை ஈடுசெய்யலாம். இதுவரையும் டீசல் இலவசமாக தரவில்லை. ஒரு அந்தர் பசளைக்கு 12,000.00 ரூபா படி பணம் செலுத்தித்தான் எடுத்திருக்கின்றோம். ஒரு ஏக்கருக்கு 4,000.00 ரூபா அரசாங்கம் காசு தந்திருக்கின்றார்கள். அதுவும் மக்கள் வங்கியில் கணக்கிட்டவர்களுக்கு இன்னும் காசு கிடைக்கவில்லை. சொந்த பூமியை கணக்கிட்டாலும் ஒரு போத்தல் கிருமி நாசினி 1500.00 ரூபாவுக்கு விற்கப்பட்டது தற்போது 7500.00 ரூபா, சோபிட் 1500.00 ரூபாவுக்கு விற்கப்பட்டது 13,000.00 ரூபா இந்த நாட்டின் முதுகெலும்பு விவசாயம் ஏர் பிடிக்க நான் இல்லாவிட்டால் ஏது உனக்கு சோறு. எனவே எங்களையும் தாக்காமல் உங்களையும் தாக்காமல் நடுநிலையில் போகுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம். நபீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்கள் கூறிய மாதிரி, நம்பிக்கையாளர் சபையின் காணிதான் இந்த ஊரில் கிட்டத்தட்ட 02 APC இலும் 22,000 ஏக்கர் சம்மாந்துறையில் விவசாய நிலம் இருக்கின்றது. 22,000 ஏக்கரையும் தீர்மானிப்பது சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையின் பராமரிப்பின் கீழ் இருக்கின்ற 162 ஏக்கர் காணிதான் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த ஊர் மக்கள் மிகவும் கவலையாக கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதே நிமிடம் நாங்கள் நம்பிக்கையாளர் சபையிடம் சொன்னது என்னவென்றால் பட்டி பாய்ச்சல் பூமிக்கு ஒரு ஏக்கருக்கு 60,000.00 உம், சேனைக்காடு கண்டங்களுக்கு ஏக்கருக்கு 40,000.00 உம் தீர்மானித்து இந்த முறை மக்களுக்கு ஒரு நிவாரணமாக செய்தோம். அதற்கு பல எதிர்ப்புகளும் வந்தது. பொதுவாக நம்பிக்கையாளர் சபைக்கு உலமா சபை எதிர்த்தது. வகூப் சொத்துகளை நீங்கள் எப்படி கொடுப்பீர்கள் என்ற நிலைப்பாடு வந்தது. அதையும் முறியடித்து கொடுத்தோம். ஆனால் போடிமார் 60,000.00 பள்ளிவாசல் காணி சென்ற பிறகு காசை தாருங்கள் என்று சொன்னவர்கள் எங்களுக்கு 80,000.00 படி தர வேண்டும் என்று இந்த முறை வேளாண்மை செய்யப்பட்டுள்ளது.

25 வீதமான அறுவடை நடைபெற்றுள்ளது. 75 வீதமான அறுவடை இன்னும் இருக்கின்றது. இதற்கு இருக்கின்ற மிகவும் பாரிய பிரச்சினை யானை பிரச்சினை. சம்மாந்துறையில் உள்ள 52 குழுக்கள் சேர்ந்து ஏக்கருக்கு 100.00 ரூபா பணம் அறவீடு செய்து யானைக்கு பாதுகாப்பு போட்டு யானையை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இயலாது. யானைக்கு ஒரு தீர்மானம் இந்த சபையில் எடுத்து வனவள அமைச்சருக்கு சபை ஊடாக அனுப்ப வேண்டும். அடுத்து நெல் காய வைக்கின்ற பிரச்சினை தற்போது இருக்கின்றது. அம்பாறை உதவி ஆணையாளர் நான் மாவட்டக் குழுவில் ஒரு அங்கத்தவராக இருக்கின்றேன். அவர்கள் கூறினார்கள் அரசாங்கத்தால் ஒரு இடம் தாருங்கள் நாங்கள் நெல் காய வைக்கின்ற Dryer போட்டுத் தருகின்றோம் என்று, முன்னாள் தவிசாளர் அவர்களிடமும் நான் கதைத்திருக்கின்றேன். பாம் காணியில் 03 ஏக்கர் காணியை விவசாயிகளுக்கு Dryer பூட்டி நெல் காயவைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று. அரசாங்க அதிபரிடம் கேட்போம் என்று சொன்னார். இந்த சபை ஊடாக ஒரு தீர்மானம் எடுத்து விவசாயிகளுக்கு செய்தால் உதவியாக இருக்கும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்

**கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் கூறியது இடம் ஒன்று கொடுத்து Dryer அரசாங்கம் பூட்டினால் நெல்லை எப்படி காய வைப்பது? அதற்கு ஒரு அளவு இருக்கின்றது. 16,000 கிலோ 30,000 கிலோ என்று இருக்கின்றது. அரசாங்கம் ஒரு 30,000 கிலோ காயவைப்பதற்கு Dryer தந்தால் எத்தனை பேரின் நெல்லை காய வைப்பது? ஒவ்வொருவரையும் 50, 30, 20 என்றால் யாருடையதை காயவைப்பது. 50, 30, 20 இவைகளுகெல்லாம் Dryer இல்லை. அரசாங்கம் தருவது என்றால் 30 ஆயிரம் கிலோவிற்கு மேலால் தான் தருவார்கள். தரமான நெல்லினை வைத்திருப்பவர்கள் சேனைக்காடு நெல்லை விரும்ப மாட்டான். இது சாத்தியப்படாத ஒன்று. ஆனால் நீங்கள் சொல்கின்ற காணியில் களம் ஒன்று அமைத்தால் அதில் காய வைக்கலாம். 50 மூடை வைத்திருப்பவர் ஒரு இடத்தில் காய வைப்பார், 30 மூடை வைத்திருப்பவர் ஒரு இடத்தில் காய வைப்பார்கள். வேண்டிய இடத்தில் காய வைக்கலாம். Dryer பூட்டி காயவைப்பது சாத்தியப்படாத ஒன்று. அரசாங்கம் இடம் தந்தாலும் அதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம். நபீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் மழை காலத்தில் காய வைப்பதற்குதான் Dryer பூட்ட வேண்டும் என்று சொன்னேன். மழை காலம் இல்லாத நேரத்தில் கௌரவ உறுப்பினர் கூறுவது சரி. மழைக்காலத்தில் மாத்திரம் தான் Dryer பாவிக்கப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விவசாயம் சம்பந்தமான விடயத்திற்கு வரலாம் என்று நினைக்கின்றேன். அதிக பணத்தை செலுத்தி காணிகளை குத்தகைக்கு பெற்றுக் கொள்வது என்பது இரண்டு பேருக்கு இடையிலான தொழில். ஆனால் இன்று ஒட்டுமொத்தமாக இந்த நாட்டில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். 2020, 2021 ஆம் ஆண்டுகளில் ஒரு மூடை நெல்லின் விலை 4500.00 ரூபா. அந்த நேரம் உரம் ஒரு மூடையின் விலை 1200.00 ரூபா. களை நாசினி 1000.00 தொடக்கம் 1500.00 ரூபா. அதே போன்று கிருமி நாசினிகளும் அதே விலையில்தான் விற்கப்பட்டது. காணிகளை உழவுவதற்காக 5000.00 ரூபா ஒரு ஏக்கருக்கு வழங்கப்பட்டது. அந்த நேரம் விவசாயிகளுக்கு போதுமான இலாபம் இருந்தது. ஆனால் இன்று இந்தத் தொகைகள் மூன்று மடங்காக அதிகரித்தும் நெல்லின் விலை அதிகரிக்கப்படவில்லை. இன்று ஒரு ஏக்கர் காணி உழவுவதற்கு 15,000.00 ரூபா, களை நாசினி 7,000.00, 8,000.00 ரூபா. கிருமி நாசினி 10,000.00, 11,000.00 ரூபா போன்ற விலைகளுக்கு விற்கப்படுகின்றது. அண்மைக்காலமாக உரம் ஒரு மூடை ஏறத்தாள 30,000.00, 40,000.00 ரூபா கொடுத்து கொள்வனவு செய்த காலம் இருந்தது.

எனவே இன்று ஒரு ஏக்கர் வேளாண்மை அறுவடை செய்வதற்கு 12,000.00, 13,000.00 ரூபா என்ற வீதத்தில் செலவீடு செய்ய வேண்டி இருக்கின்றது. அதேபோன்று 2020, 2021 ஆம் ஆண்டுகளில் 5000.00 ரூபாதான் அதற்காக செலுத்தப்பட்டது. ஒட்டுமொத்தத்தில் பார்க்கின்றபோது விவசாயிகளின் செலவீனங்களையும், நெல்லின் விற்பனை விலையையும் எதிர்நோக்குகின்ற போது இரண்டு மடங்கால் விவசாயிகள் நஷ்டம் அடைந்திருக்கின்றார்கள். ஆனால் அவ்வாறு இருக்கின்ற போது அரசு இன்று தீர்மானித்திருக்கின்ற நூறு ரூபா போதுமானதாக இல்லை. அதே நேரம் எம்மால் நெல்லுக்கான நிர்ணய விலையினை தீர்மானிக்கவும் முடியாது. இந்த சபையில் ஒரு தீர்மானமாக விவசாயிகளின் நலன் கருதி கௌரவ தவிசாளர் அவர்கள் குறிப்பிட்டவாறு ஆகக் குறைந்தபட்ச விலையாகத்தான் 150 ரூபாவை கருதலாம் என்று நினைக்கின்றேன். ஒரு இலட்சம் அல்லது 110,000.00 இற்கு குத்தகைக்கு காணி எடுப்பது என்பது தனிப்பட்ட இருவரினுடைய விடயம். ஒட்டுமொத்த விவசாயிகள் என்று உற்றுநோக்கின்ற போது இன்று ஆகக் குறைந்தது இந்த செலவினங்களுக்கு பதிலாக 15,000.00 அல்லது 14,000.00 ரூபாவுக்கு ஒரு மூடை விற்றால்தான் விவசாயிகளினுடைய சராசரி ஐந்து மாத காலத்திற்கு ஒரு போகம் அவர் விதைத்ததில் இருந்து அறுவடை செய்து வருகின்ற காலம் என்கின்ற போது சாதாரண ஒருவருடைய நாற்கூலி கணக்கீடு செய்தால் கூட இந்த இலாபத்தை ஒரு கூலி விவசாயி பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இன்று அரசினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற விலை விவசாயிகளுக்கு போதுமானது அல்ல. ஆக குறைந்த பட்ச விலையாக கௌரவ தவிசாளர் அவர்களால் கூறப்பட்ட 150 ரூபாவது நெல்லுக்கு அரசாங்கம்

விவசாயிகளுக்காக அங்கீகரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை இந்த சபையிலே நாம் ஏக மனதாக தீர்மானித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இதனை அறிவிக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ஏ.தம்பிக்கண்டு அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நெல்லுக்கான விலை போதாது என்கின்ற விடயத்தை நாடு பூராகவும் விவசாயிகள் தெரிவித்திருக்கின்றார்கள். அவர்களுடைய தீர்மானத்தை வலுவூட்டக்கூடிய முறையில் எங்களுடைய சபையில் ஒரு தீர்மானத்தை எடுத்தால் பொருத்தம் என்றும் காலத்தின் தேவை என்றும் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

## தீர்மானம் - 04/59/04

அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்படும் ஒரு கிலோ நெல்லின் உத்தரவாத விலையினை ஆகக் குறைந்தது 150.00 ரூபா என நிர்ணயித்து, அரசாங்கமே கொள்வனவு செய்ய வேண்டும் என்று அரசாங்கத்திற்கும், உரிய அமைச்சிற்கும் கடிதம் அனுப்புவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## தீர்மானம் - 04/59/05

1. LDSP செயற்திட்டத்திற்கான பெறுகைக்குழு மற்றும் TEC குழு நியமிப்பதற்கான தீர்மானம்.

I. தலைவர் : ஜனாப்: I.L.M.மாஹிர் - கௌரவ தவிசாளர்

உறுப்பினர்கள் :
1. ஜனாப்: A.அச்சி முஹம்மட் - கௌரவ உப தவிசாளர்
2. ஜனாப்: A.L.M.அஸ்லம் - உதவித் திட்ட பணிப்பாளர், பிரதேச செயலகம்,சம்மாந்துறை
3. திருமதி: K.L.சிஹாமா - கௌரவ உறுப்பினர்
4. ஜனாப்: M.A.K.முஹம்மட் - செயலாளர்
5. திருமதி: U.S.M.சதாத் - உள்ளூராட்சி உதவியாளர்
6. ஜனாப்: S.A.C.M.S.B.மௌலானா – CDO

**TEC குழு**

1. ஜனாப்: A.M.சாஹீர் - பொறியியலாளர் (தலைவர்)
2. ஜனாப்: M.M.M.முஸ்தபா - தொழில்நுட்ப உத்தியோகத்தர், சம்மாந்துறை பிரதேச சபை (உறுப்பினர்)
3. ஜனாப்.A.J.M.றிஸ்வான் - தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சம்மாந்துறை (உறுப்பினர்)

**II. சபையின் பெறுகைச் சபை**

1. ஜனாப்: I.L.M.மாஹிர் - கௌரவ தவிசாளர் (தலைவர்)
2. ஜனாப்.M.A.K.முஹம்மட் - செயலாளர் (உறுப்பினர்)
3. திரு.S.திருப்பிரகாசம் - கணக்காளர், வலயக்கல்வி அலுவலகம், சம்மாந்துறை (உறுப்பினர்)

**சபையின் TEC**

1. ஜனாப்.M.L.அமீர் அலி - பொறியியலாளர், இலங்கை போக்குவரத்து சபை

சம்மாந்துறை. (தலைவர்)

2. ஜனாப்.M.M.M.முஸ்தபா - தொழில்நுட்ப உத்தியோகத்தர் (உறுப்பினர்)
3. ஜனாப்.A.J.M.றிஸ்வான் - தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம்

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/06**

அரச தொழிற்பயிற்சி நிறுவனங்களிலிருந்து பயிற்சிக்காக வருகை தரும் பயிலுனர்கள் 06 பேருக்கு 04/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கமைய கொடுப்பனவு வழங்குவதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/07**

நில அளவை திணைக்களத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்ட எமது பழைய அலுவலகத்தின் கூரை, கேற் என்பவற்றினை திருத்தம் செய்வதற்கான சபைத் தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ஏ.தம்பிக்கண்டு

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/08**

திண்மக் கழிவகற்றல், வடிகான் துப்பரவு, காவலாளி கடமை, சேதனப் பசளை உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஊழியர்கள் ஓய்வு, வெளிநாடு, தாமாகவே சேவையில் இருந்து நிற்றல் போன்ற காரணங்களால் சுமார் 30 ஊழியர்களின் அத்தியாவசிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. இதற்கமைய 30 தற்காலிக ஊழியர்களை நியமிப்பதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/09**

HW – 4157 இலக்க உழவு இயந்திரத்தின் கிளச் பகுதி, இஸ்டெயரிங் பொக்ஸ், ஹெட் என்பவற்றை திருத்தம் செய்வதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/10**

JX – 7618 உழவு இயந்திரத்திற்கு முன் டயர்கள், பெட்டரி கொள்வனவு செய்து மாற்றுவதற்கான தீர்மானம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/11**

LI – 3269 இலக்க Compactor இயந்திரத்தின் முன் டயர்கள் கொள்வனவு செய்து மாற்றுவதற்கான தீர்மானம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஏ.ஏ.சீ.எம்.நிசாம் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/12**

இறக்காமம் பிரதேச சபையின் LL - 6431 இலக்க Dump Track இயந்திரத்தின் உடன்படிக்கையினை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கான தீர்மானம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | எம்.ஏ.தம்பிக்கண்டு |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/13**

வருமானப் பிரிவில் ஆதனவரி தொடர்பான பதிவேடுகளை நேர்த்தியாக பேணுவதற்கு சுவரில் நிரந்தர கோவை அலுமாரி அமைப்பதற்கும் மற்றும் வருமானப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தரின் கோவைகளை பேணுவதற்கு சிறிய கோவை இராக்கை ஒன்றினையும் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/14**

திண்மக் கழிவகற்றல் மற்றும் வெளிக்களப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு சவர்க்காரம் மற்றும் சீருடைக் கொடுப்பனவு வழங்குவதற்கான தீர்மானம்.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஏ.ஏ.சீ.எம்.நிசாம் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/15**

சபையில் கடமையாற்றும் தற்காலிக/ஒப்பந்த/பதிலீட்டு அடிப்படையிலான ஊழியர்களின் தேவை கருதி இவ் வருடத்திற்குள் முடிவடையும் சகல ஊழியர்களுக்கும் 06 மாத காலத்திற்கு நீடிப்பு வழங்குவதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/16**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 41/02 ஆம் இலக்க 2023.01.31 ஆந் திகதிய கடிதத்திற்கமைவாக, UDA நிதியினை நடைமுறைப்படுத்துவதற்காக சம்மாந்துறை இலங்கை வங்கியில் தனியான வங்கிக் கணக்கினை திறப்பதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/17**

வெளியூரில் இருந்து Mobile Service மூலமாக வியாபாரம் செய்ய வருகின்ற வியாபாரிகளுக்கு அடையாள அனுமதி அட்டை வழங்குவதற்கும், பிரதான பாதைகளில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்து, உள் வீதிகளில் நடமாடும் வியாபாரம் மூலம் தமது வியாபாரங்களை செய்வதற்கு ஒழுங்குபடுத்துவதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 04/59/18**

கீழ்வரும் வேலைகளை செயற்படுத்துவதற்கான தீர்மானம்

1. Renovation of Culvert at Mal 3rd road.
2. Renovation of Road at Arafa Vidyalaya Road
3. Renovation of Drainage at Am 12th cross Road
4. Renovation of Road & Culvert Hijra 1st cross Road
5. Renovation of Ismail Puram Internal Roads
6. Renovation of Council Chamber roof & Ceiling
7. Renovation of Internal Repairing Hijra Public Market
8. Renovation of Internal Repairing Sports Complex Building

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எம்.நபீல்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த இடத்திலே சில விடயங்களை கதைக்க வேண்டி இருக்கின்றது. ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதி சம்பந்தமாக, நான் நினைக்கின்றேன் ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதி சம்மாந்துறை பிரதேச சபைக்காக வழங்கப்பட்ட காலம் 10 வருடங்கள். முடிவடையும் தருவாயில் இருக்கின்ற போது அதனை மீண்டும் மாகாண சபைக்கு எடுத்து செல்வதற்கு சில தீய சக்திகள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் கூறுகின்ற காரணம் என்னவென்றால் இங்கே விளையாட்டுக்காக உருவாக்கப்பட்ட இந்த விளையாட்டுத் தொகுதி வேறு தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் வழங்குகின்றார்கள், விளையாட வருகின்றவர்களுக்கு கூடுதலான கட்டணங்களை அறவிடுகின்றார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்து, எங்களுடைய சபையின் கட்டுப்பாட்டிலே இருக்கின்ற அந்த விளையாட்டு கட்டிட தொகுதியினை மீண்டும் மாகாண சபைக்கோ அல்லது விளையாட்டு அமைச்சிக்கோ எடுத்து செல்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எங்களுடைய சபையின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியே கொண்டு செல்வதற்குரிய முயற்சிகளை கட்சி பேதம் இல்லாமல் ஊரின் சொத்தாக மதித்து கட்சியின் சகல அங்கத்தவர்களும் இதற்காக முயற்சிக்க வேண்டும் என்று கோருவதோடு, எங்களது ஊரைப் பொறுத்த வரையிலே விளையாட்டுத் துறையிலே மிகவும் திறமையான வீரர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குரிய சந்தர்ப்பங்கள் வாய்ப்புகள் சரியாக வழங்கப்படாமையினால் தங்களுடைய திறமைகளை வெளிக்காட்டக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இலை மறை காயாக இருந்து கொண்டிருக்கின்றார்கள். அண்மையிலே Table Tennis இலே எந்த அடிப்படை பயிற்சிகளும் இல்லாமல் youtube இலே பார்த்து பயிற்சி பெற்று மாகாண மட்டத்திற்கு சென்று மூன்றாம் இடத்தை எங்களுடைய சம்மாந்துரையை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மூவர் பெற்றிருக்கின்றார்கள். இவ்வாறு மற்றய விளையாட்டுத்துறையிலும் தங்களுடைய திறமையை வெளிக்காட்டுவதற்குரிய சூழ்நிலை இல்லாமல் ஏற்படுத்தாமல் இருக்கின்றது.

எனவே இந்த சபை அவர்களுக்குரிய சகல வசதிகளையும் செய்து கொடுப்பதற்காக விளையாட்டுத் தொகுதியிலே இருக்கின்ற பெட்மிண்டன் கோர்ட் இணை புனர்நிர்மாணம் செய்து அதற்குரிய காபெட் வெளிச்சங்கள், அதற்குரிய நெட் போன்ற சகல வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு சபையிலே ஒரு தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும். அடுத்தது அங்கே பயிற்சி பெறுகின்ற பாடசாலை மாணவர்கள் 1 ½ மணித்தியாலயத்திற்கு 600.00 ரூபாய் கட்ட வேண்டிய நிலைமை இருக்கின்றது. அது படிக்கின்ற மாணவர்களுக்கு பாரிய சுமையாக இருக்கின்ற படியினால் அதனை நாம் எவ்வாறு இலகுவாக்கி கொடுக்கலாம் என்பதைப் பற்றி சபையின் அங்கத்தவர்களுடைய கருத்துக்களை வேண்டி நிற்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விளையாட்டுத் தொகுதி சாதாரணமாக அதற்கு பொறுப்பாக்கப்பட்டவரின் தனிப்பட்ட முயற்சியினாலும் ஏனையவர்களைக் கொண்டு வேலை வாங்கியதாலும், சபையின் உதவினாலும் சபைக்கு வருமானம் கிடைக்கின்றது. இப்படியாக வளர்ச்சி அடைந்து கொண்டு வருகின்றதை வேறு ஆட்கள் கையகற்றுவதற்கு மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு செல்வதற்கு இந்த சபை எந்த காரணங்களுக்கும் அனுமதி வழங்க முடியாது. நாங்கள் மாணவர்கள் விடயத்தில் எல்லா பாடசாலை மாணவர்களையும் குளிப்பதற்கு அனுமதிக்க முடியாது. அதற்காக செலவுகள் மோட்டார் திருத்தம், தற்போது அதற்குரிய பொருட்களின் விலை மும்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெறுகின்ற பிள்ளைகள் பாடசாலை அதிபரின் அனுமதியோடு வந்தால் இலவசமாக வழங்கினாலும் அது எம்மை பாதிக்காது. ஒரு பாடசாலையில் ஒருவர் அல்லது மூவர் தெரிவு செய்யப்பட்டு வருவாரானால் அவர்களுக்கு அந்த உதவியை செய்யலாம். ஏனையவைகளுக்கு மாணவர்களுக்கும் நாம் சம்பூரணமாக உதவி செய்ய வேண்டும். அது மட்டுமல்ல ஏனைய ஊரில் இருக்கின்ற விளையாட்டு கழங்கள் இந்த சபையின் அனுமதியோடு ஏதாவது உபகரணங்கள் தாருங்கள் என்று கேட்டால் அதை செய்ய வேண்டும். காலத்தின் கட்டாய தேவை அதிலே இருக்கின்றது.

போதைக்கு அடிமையாகின்ற காரணமும் மற்ற மாற்றீடான ஒன்று இல்லை. அவர்கள் விரும்பக்கூடிய ஒன்று விளையாட்டுதான் ஒரு பொழுதுபோக்கு. சரியான வழிகாட்டல் இல்லாமலே மூன்றாம் இடத்திற்கு தெரிவாகின்றார் என்றால் நமது பிரதேசத்தில் எத்தனையோ Interview வைத்தாலும் நாங்கள் சபையால் உதவி செய்த மாணவன் எத்தனையோ முறை பயிற்சித்து பார்த்தும் முதலாம் இடத்திற்கு வந்து அயல் நாடுகளுக்கு சென்று பயிற்சி பெறுகின்றார். எனவே நமது ஊர் மிகவும் அதிக சனத்தொகையை கொண்ட ஊர். இந்த ஊரின் கல்வி அத்தோடு விளையாட்டுத் துறையை சேர்ந்த கல்வி இவை எல்லாம் மேம்படுவதற்கு உரிய காலத்திற்குள் உதவி செய்ய வேண்டும். திடீர் என்று வந்தாலும் கூட 10, 15 பேர் வருகின்ற நேரம் தங்குவதற்கான ஏற்பாட்டை கூட செய்தது அந்த நிலையம். மறைந்த முன்னாள் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் ஏற்பாட்டில் நீச்சல் தடாகம் வந்தது. இந்த நேரத்தில் அவருக்கு நன்றி கூற வேண்டும் கிழக்கு மாகாணத்திலே நீச்சல் தடாகம் அதுதான்.

அதுமட்டுமல்ல எங்களது காலத்தின் தேவை கௌரவ முன்னாள் தவிசாளர் அவர்கள் இரண்டு முறை இராஜினாமா செய்திருக்கின்றார்கள். அந்த இரண்டு தடவையும் தவிசாளர் பதவிக்கு நீங்கள் போட்டியிட்டீர்கள். ஆனால் தெரிவாகவில்லை. போட்டி இல்லாமலே இந்த முறை இறைவன் உங்களை தெரிவு செய்ய வைத்திருக்கின்றான். நாங்கள் தெரிவு செய்து வந்ததற்கு பின்னர் தெரிவு செய்வதற்கு உதவாத அங்கத்தவர்களையும் நாங்கள் சுட்டிக் காட்டி பேசவில்லை. இந்த சபைக்குள் வந்தால் நாங்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை போல் எங்களது சகல அங்கத்தவர்களும் அவர்கள் மாற்றுக் கருத்துள்ளவர்களாக இருந்தாலும் சரி, மாற்றுக் கட்சியில் இருந்தாலும் சரிதான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கொள்கையின் அடிப்படையில் மாற்றுக் கட்சிகளில் இருக்கலாம். ஆனால் எல்லோரும் ஏகமனதாக முன்பு எமது சபை எப்படி தீர்மானம் எடுத்ததோ அதே போல் மீண்டும் அந்த நிலைக்கு நாங்கள் சென்று தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு இந்த சந்தர்ப்பத்தை வழங்கிய இறைவனுக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஜனாதிபதி விளையாட்டு கட்டிட தொகுதியை எடுத்துக் கொண்டால் கட்டாயமாக இந்த ஊருக்கு தேவையான ஒன்று இந்த ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதி. ஏனென்றால் இங்கு அதிகமாக இளைஞர்கள் தேவை இல்லாத பாதைகளுக்கு இட்டுச் செல்கின்றார்கள் அவர்களை ஒரு நேரான பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்றால் ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி மிகவும் முக்கியம். ஆனால் நாங்கள் நூலகத்திற்கு ஒரு அட்டை வழங்கி அவர்களுக்கு முன்னுரிமை வழங்குகின்ற மாதிரி ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதிக்கு ஒரு அட்டை வழங்கி அதாவது தொடர்ந்து பயிற்சிக்கு வரக்கூடிய பிள்ளைகள் எங்களால் தெரியப்பட்டிருந்தால் அவர்களுக்கு ஒரு அட்டை வழங்கி அவர்களுக்கு ஒரு சிறு தொகைகளை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இடையில் வருகின்ற அல்லது திடீர் விஜயம் செய்பவர்களுக்கு ஒரு தொகையை எடுக்கலாம் என்று நினைக்கின்றேன்.

இந்த ஊரில் விளையாட்டுத்துறையில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் பிள்ளைகளுக்கு நீச்சல் செய்வதற்கு விருப்பம், அதை எவ்வாறு செய்வது எப்படி செய்வது என்கின்ற முறை தெரியாமல் இருக்கின்றது. அதற்கு நாங்கள் கோச்சாரோ அல்லது யாரையாவது போட்டு அந்த பிள்ளைகளை சிறுவயதில் இருந்தே நீச்சல் தடாகத்தில் பிள்ளைகளை பழக்கி எடுக்க வேண்டும். அதே மாதிர Bedminton இலும் அதில் இருக்கின்ற ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் முக்கியமான விடயம் ஏனென்றால் பிள்ளைகளுடைய உணவு பழக்கங்களும் மிகவும் வித்தியாசமான நிலையில் பெற்றோர்களுக்கு வேலை சுமை காரணமாக பிள்ளைகளுக்கு முக்கிய போஷாக்கான உணவுகள் வழங்கப்படுவதில்லை. வித்தியாசமான உணவுகள் சாப்பிடுவதனால் பிள்ளைகள் நோய்கள் அதிகரிக்கின்றது. அந்த நோய்கள் அந்த பிள்ளைகளை விட்டு வெளியேற வேண்டும் என்றால் அந்த பிள்ளைகளுக்கு வியர்வை என்ற ஒரு செயற்பாடு ஒன்று நடந்தால் பிள்ளை நோயை விட்டு விலகும். ஆகவே விளையாட்டு முக்கியத்துவம் இருப்பதினால் இவ்வாறு நாங்கள் அட்டைகளை அவர்களுக்கு வழங்கி இந்த விளையாட்டில் சிறு குறிப்பிட்ட தொகையை பயிற்சி பெற வருகின்ற மாணவர்களுக்காக அனுமதித்து மற்றவர்களுக்கு எங்களது சபையால் தீர்மானிக்கின்ற பெரிய தொகையை எடுக்கலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபையினால் நான் நினைக்கின்றேன் 44 அல்லது 45 வது அமர்விலே ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது, எங்களது ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதியிலே இருக்கின்ற அத்தனை விளையாட்டுக்கும் பொறுப்பான விளையாட்டு ஆசிரியர்களை தற்காலிகமாக இந்த சபையின் ஊடாக நியமிப்பது. அத்தோடு கடின பந்து விளையாட்டுக்கு தேவையான பயிற்சிக்கூடம் ஒன்றை அந்த இடத்திலே அமைப்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது சபையின் பணவீக்கம் காரணமாகவும் அந்த முயற்சிகள் இடையே நிறுத்தப்பட்டு இருந்தது. ஆனால் அவ்வாறே அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு இலட்சம் வேலை ஆட்கள் நியமனம் தற்காலிக அடிப்படையில் ஆட்களை சேர்ப்பதில் எங்களுக்கு சிரமம் ஏற்பட்டது. இன்று அதற்கான ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த வகையிலே தற்காலிக அடிப்படையில் நாம் தெரிவு செய்யப்படுகின்ற ஆட்களில் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களையும் தெரிவு செய்து அங்கு வருகின்ற மாணவர்கள் அல்லது விளையாட்டு வீரர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கக்கூடிய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு ஆசிரியர்களை நாம் நியமிக்க வேண்டும்.

கடந்த முறை காலணி கூட இல்லாமல் சென்று உதைப்பந்தாட்ட போட்டியிலே அகில இலங்கை ரீதியாக எமது மண்ணைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இருந்தார்கள். அவர்களுக்கான உதவிகளை இந்த சபையின் ஊடாக செய்ய வேண்டும் என்று ஏக மனதான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினோம். அவ்வாறு பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டும் அதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லை. அவ்வாறு இருக்கும்போது பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக நாங்கள் விளையாட்டு தொகுதியை பயன்படக் கொடுத்தால் அது ஒரு கட்டுக்கோப்பற்ற ஒரு விடயமாக மாறிவிடும். ஏதோ ஒரு வகையில் ஆகக் குறைந்தது கோட்ட மட்டத்தில் அல்லது மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்காக இலவசமாக அந்த இடத்தை பயன்படுத்துவதற்கு இந்த சபை ஏகமானதாக அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கௌரவ தவிசாளர் அவர்களே, முடியுமாக இருந்தால் எமது ஊரிலே இன்று கடின பந்து விளையாடுகின்ற விளையாட்டு கழகங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது மிகவும் திறமையாக இந்த மாவட்டத்திலே இந்த மாகாணத்திலே அவர்கள் மேலோங்கி கொண்டிருக்கின்றார்கள். ஆனால் சிறந்த முறையிலே அவர்களுக்கு அந்த பயிற்சியளித்து அந்த விளையாட்டை விளையாடுவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கின்றது. ஏதோ ஒரு வகையில் ஒரு மைதானத்தை நாம் இன்று அமைத்திருக்கின்றோம். ஆனால் கடின பந்து விளையாடக்கூடிய மைதானம் அல்ல இருந்தாலும் காலத்தின் தேவை கருதி அவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய ஜனாதிபதி விளையாட்டு தொகுதி கட்டடத்தில் நாங்கள் அதற்கான குறிப்பாக பந்து வீச்சு பயிற்சிக்குரிய கூடம் மிகக் குறைந்த செலவிலே அமைக்கலாம் நான் நினைக்கின்றேன் 0.2 மில்லியன் இருந்தாலே அதை செய்யலாம் என்று நினைக்கின்றேன். ஆகவே அதனை செய்வதற்கு இந்த சபை ஏகமானதாக ஒரு தீர்மானத்தை இன்று வழங்க வேண்டும் என்று உங்களுடன் மிக பணிவாக கேட்டுக் கொள்வதோடு,

ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதி ஏற்கனவே கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்திற்குட்பட்டிருந்ததை இந்த ஊரின் அரசியல் அதிகாரங்களை பயன்படுத்தி இதற்கு முன்பு இருந்த சபையில் இருந்த உறுப்பினர்கள், கௌரவ தவிசாளர் எல்லோரினுடைய கடின முயற்சியினால் மீண்டும் சம்மாந்துறை பிரதேச சபையினுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து குறிப்பாக நான் நினைக்கின்றேன் கிழக்கு மாகாணத்திலே அல்லது இந்த நாட்டிலே ஒரு பெயர் கூறக்கூடிய ஒரு விளையாட்டுத் தொகுதியாக அந்த இடம் இருந்தது. எனவே இந்த சபை, இந்த ஊர், புத்திஜீவிகள் இந்த சபையிலே இருக்கின்ற கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் ஒருமித்த குரலோடு இந்த ஊரில் இருக்கின்ற எந்த ஒரு வளத்தையும் இந்த ஊருக்கு வெளியே செல்வதை அனுமதிக்கக்கூடாது என்பதையும் இந்த இடத்தில் உங்களிடம் பணிவாக வேண்டி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு மனிதனை முழுமையாக்குவதில் விளையாட்டு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த அடிப்படையில் ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதியின் கீழ் எத்தனையோ விளையாட்டுப் பயிற்சிகள் இருந்த போதிலும் கடந்த காலங்களில் எமது சபை ஊடாக மேற்கொள்ளப்பட்ட அதற்கான ஒத்தாசைகள் உதவிகள் போதாது என்பதுதான் எனது கருத்தாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் இறைவனின் ஏற்பாட்டினால் இன்று அமைந்திருக்கின்ற இந்த சபையின் மூன்றாவது தவிசாளராக நீங்கள் அமர்ந்திருக்கின்றீர்கள் உங்களது முயற்சியினாலும் அந்த விளையாட்டு கட்டிடத் தொகுதிக்கான பயிற்சிகள் அனைத்தையும் இந்த சபையில் பல தடவைகள் பல கௌரவ உறுப்பினர்களால் வேண்டிக் கொண்ட போதிலும், இன்று உங்களுக்கு இறைவன் அருளால் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. உங்களது தலைமையில் அந்த விளையாட்டு தொகுதிக்கான அனைத்து பயிற்சிக்கான சகல நிலைகளையும் சீர்படுத்த வேண்டும் என்பது எனது கருத்தாக இருக்கின்றது. அத்துடன் எமது சபைக்கான வருமானம் அங்கு முக்கியமாக கவனிக்க வேண்டி இருக்கின்றபடியினால் ஒரு கட்டுப்பாடான நிலைகளை உருவாக்க வேண்டும். ஏற்கனவே கூறப்பட்ட எமது கௌரவ உறுப்பினர்களின் உரையின் போது அதை சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். அவ்வாறு அந்த கட்டுப்பாடுகளை உருவாக்கி பாடசாலை மாணவர்களுக்கு சலுகை கட்டணங்களையும் உருவாக்கி செயல்படுத்த வேண்டும் என்பது எனது கருத்தாக இருக்கின்றது.

அதே நேரத்தில் சம்மாந்துறையில் இருக்கின்ற மக்கள் பிரதிநிதி சபை என்றால் சம்மாந்துறை பிரதேச சபை என்பதுதான் இறுதியாக சம்மாந்துறைக்கு எஞ்சி இருக்கின்றது. இந்த சபை அல்லாஹ்வின் பேரருளால் கடந்த 2023.02.14 இல் மிகவும் பிரேயத்தனத்திற்கு மத்தியில் இந்த சபை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த சபையை உருவாக்காமல் இருக்க வேண்டும். உருவாகக்கூடாது என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக கங்கணம் கட்டிய ஒரு செயற்பாடும் இருந்தது. இது எவ்வாறு என்றால் தான் இருந்து கொண்டு தான் இருக்கின்ற கிளையை வெட்டுவது போல் அமையும். ஊருக்கு ஒரு அவமானமாக அமையும். ஊரில் எஞ்சியிருக்கின்ற அரசியல் அதிகாரங்கள் கூட இல்லாத சூழ்நிலையில்தான் ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதன் காலம் முடிவடைகின்ற காலகட்டத்தில் வெளியேற்றப்படுவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருப்பதை நாங்கள் அறியக் கூடியதாக இருக்கின்றது. இன்று இந்த சபை அமைந்திருக்காவிட்டால் இதைப் பற்றி பேசுவதற்கு சம்மாந்துறை நாதியற்ற நிலையாக இருந்திருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

ஆகவே இது மாத்திரமல்ல ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இல்லாத சம்மாந்துறைக்கு இங்கு இருக்கின்ற இந்த உயரிய சபை எத்தனை நாட்களுக்கு நீடிக்கின்றதோ தெரியாது. இருந்தாலும் ஒரு நாளோ அல்லது ஒரு மாதம் என்றாலும் சரிதான் எங்களது ஊரின் மான மரியாதையை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எங்கள் அனைவருக்கும் இருக்கின்றது. அந்த அடிப்படையில் என்னைப் பொருத்தமட்டில் நான் இந்த சபை உருவாவதற்குரிய செயற்பாட்டை முன்னெடுத்தவன் என்பதை இந்த சபையில் இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சிக்குரியவன் என்ற அடிப்படையில் அந்தப் பொறுப்பை சுமந்தவனாக இந்த சபையை அமைத்திருக்கின்றேன். இதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. ஆகவே நாங்கள் எங்களது ஊர் இருக்கின்ற நிலையில் எல்லாவற்றுக்கும் பணத்தை ஒதுக்கிக் கொண்டு செலவுகளை நீட்டிக்கொண்டு செல்வது சரியாக அமையாது. ஏனென்றால் இந்த நாடு இருக்கின்ற நிலை தேர்தல் பிற்போடப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் தேசிய ரீதியான அரசின் செயற்பாட்டை உணர்ந்து அதற்கமைய நாங்கள் எல்லாவற்றிலும் செயற்பட வேண்டும். எல்லாவற்றையும் இலவசமாக சலுகை அடிப்படையில் செய்தால் நாங்கள் இந்த நிதியினை சரியாக இந்த காலகட்டத்தில் பராமரிக்க முடியாதவர்களாக ஆகிவிடுவோம் என்று அச்சமாக இருக்கின்றது. ஆகவே கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் எல்லா விடயங்களிலும் கண்ணும் கருத்துமாக இருந்து எங்களது செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் ஊரின் வளங்கள் எங்கும் செல்லக்கூடாது என்பதுதான் எனது கருத்தாக இருக்கின்றது. அந்த விடயத்தில் கௌரவ அதிமேதகு ஜனாதிபதி அவர்களோடு தொடர்புபட்டாவது இந்த செயற்பாடு அவ்வாறாக இருக்குமானால் அதை தடை செய்வதற்கு இந்த சபை சார்பாக உங்களது அனைவரது ஒத்துழைப்பையும் கௌரவ தவிசாளர் மூலம் பெற்றுக் கொண்டு எந்தவிதமான செயற்பாட்டுக்கும் நான் முன்நிற்பேன் என்று கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கிய கௌரவ உறுப்பினர்களுக்கு நன்றியை கூறிக்கொண்டு, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கூறியது போல் அட்டை ஒன்றை வழங்கினால் அதற்காக எவ்வளவு அறவீடு செய்வது என்பதை தீர்மானித்தால் நல்லது. சில விளையாட்டுக்கள் தனியே ஒரு விளையாட்டு வீரரால் விளையாட முடியாத விளையாட்டுக்கள் இருக்கின்றது. Tabble Tennis, பெட்மின்டன் விளையாடுவதற்கு ஆக குறைந்தது இரண்டு பேர் வேண்டும். அப்படி இருக்கும்போது இரண்டு பேர் விளையாடுவதற்கு வந்தால் அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு அட்டை வழங்கி ஒரு கிழமையில் மூன்று அல்லது நான்கு நாட்கள் ஒரு நாளைக்கு இரண்டு மணித்தியாலயம். அப்படி வருகின்றவர்களுக்கு சேவை அடிப்படையில் குறைந்த கட்டணத்தை அறவிட வேண்டும். கௌரவ உறுப்பினர் நளீம் கூறியது போன்று மாவட்ட மட்டம் அல்லது மாகாண மட்டம் அல்லது கோட்ட மட்டத்தில் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கு பாடசாலை அதிபரின் கடிதத்தோடு வருபவர்களுக்கு இலவசமாக வழங்குவதோடு ஏனைய பாடசாலை மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்கு குறைந்த கட்டணத்தை அறவீடு செய்வதற்கு கட்டணத்தை தீர்மானித்தால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஏற்கனவே சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் இருக்கின்ற மின் கட்டணம் செலவீனங்களை கருத்தில் கொண்டு தான் அந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. இரண்டு, மூன்று நாட்களுக்கு பின்னர் இன்னும் 66% மின் கட்டணம் அதிகரிக்கப்பட இருக்கின்றது. சேவை அடிப்படையில் செய்தாலும் எங்களது செலவீனங்களையும் நாங்கள் கருத்தில் எடுக்க வேண்டும். பாடசாலை மாணவர்களுக்கான சலுகையையும் செய்வோம். சபையை கொண்டு செல்வதற்கான வருமானங்களையும் பெற வேண்டி இருக்கின்றது. விளையாட்டுக்கு முன்னிடம் கொடுக்கத்தான் வேண்டும் ஆனால் குறிப்பிட்ட காலத்திற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சென்று பார்ப்போம். இல்லாவிட்டால் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்றால் மாற்றலாம். ஆனால் பாடசாலை மாணவர்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கும் உறுதியான இறுதியான தீர்மானத்தை எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம். நபீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முன்பு என்ன தீர்மானம் எடுக்கப்பட்டது என்பதை சொன்னால்தான் நாம் ஒரு தீர்மானம் எடுக்கலாம். பாடசாலை மாணவர்களுக்கு எவ்வளவு? கழகத்தில் விளையாடுபவர்களுக்கு எவ்வளவு? என்ற கட்டணத்தை சொன்னால்தான் ஒரு தீர்மானத்திற்கு வரலாம். சென்ற முறை சென்ற முறை என்றால் எங்களுக்கு தெரியாது. ஆகவே அந்த கட்டணங்களை முதலில் கூறுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் முன்பு கூறியது போன்று கடந்த மாத கூட்டறிக்கையில் கூறப்பட்ட கட்டணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் பெட்மிண்டன் ஒரு மணித்தியாலயத்திற்கு 18 வயதிற்கும் கீழ்பட்டவர்களுக்கு 500.00 ரூபா என்ற விலை நிர்ணயங்கள் செய்யப்பட்டிருக்கின்றது. அதை வைத்து ஒரு தீர்மானத்திற்கு வரலாம்.

**கௌரவர் தவிசாளர் அவர்கள்:**
அதை வைத்துத்தான் ஒரு தீர்மானத்திற்கு வருவோம். கௌரவ உறுப்பினர் நளீம் கூறியது போன்று பாடசாலை மாணவர்கள் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இலவசமாகவும் ஏனைய மாணவர்களுக்கும், கழகங்களிலே விளையாடுபவர்களுக்கும் அட்டைக்கு ஒரு மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்று நினைக்கின்றேன். ஒரு கிழமையில் மூன்று நாள் ஒரு நாளைக்கு இரண்டு மணித்தியாலம் என்று வரையறுத்து ஒரு மாணவருக்கு மாதாந்த கட்டணமாக அவர் விளையாடினாலும் விளையாடாவிட்டாலும் ஆயிரம் ரூபாய் எடுப்போம்.

**தீர்மானம் - 04/59/19**

ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் Table Tennis, Badminton, Kick Boxing, நீச்சல் போன்ற விளையாட்டுக்களை விளையாட வருகின்ற மாணவர்களுக்கு அனுமதி அட்டை வழங்குவதற்கும், போட்டியில் தெரிவு செய்யப்பட்டு அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் வரும் மாணவர்களுக்கு இலவசமாகவும் ஏனைய மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்குரிய கட்டணமாக ரூபா 1000.00 அறவீடு செய்வதற்குமான தீர்மானம். அத்துடன் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களில் இருந்து வருகின்ற வீரர்கள் விளையாட்டு உத்தியோகத்தரின் அனுமதிக் கடிதத்துடன் வருபவர்களுக்கு ஒரு மாதத்திற்குரிய கட்டணமாக ரூபா 1000.00 அறவீடு செய்வதற்குமான தீர்மானம்.

| | |
|---|---|
| ஒரு கிழமைக்கு | - 03 நாள் |
| ஒரு நாளைக்கு | - 02 மணித்தியாலயம் |

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அடுத்ததாக செலவீனங்கள் மற்றும் கொடுப்பனவுகளை அங்கீகரித்தல். இதில் ஜனவரி மாதம் சபை நடைபெறாததால் டிசம்பர் மாத செலவிற்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. தற்போது 02 மாத செலவீனங்களை அங்கீகரிக்க வேண்டும். இது சம்மந்தமாக ஏதாவது கேள்விகள் இருப்பின் கேட்கலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, விளையாட்டுத் தொகுதியில் குறைபாடுகள் இருக்கின்றன. பெட்மிண்டன் விளையாடுகின்ற இடத்தில் வெளிச்சங்கள் போன்ற இன்னும் சில வேலைகள் இருக்கின்றது. இதை அவசரமாக பூரணப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**கௌரவர் தவிசாளர் அவர்கள்:**

இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. செலவீனங்களில் ஏதாவது இருந்தால் கூறுங்கள். இல்லாவிட்டால் ஆமோதியுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, டிசம்பர் மாத செலவுகளில் 200 சுகாதார சேவைகளின் கீழ் LI-3269 கொம்பெக்டரிற்கு உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்த கொடுப்பனவு 381,570.00, அதே வாகனத்திற்கு கிளச் பகுதி திருத்தம் செய்யப்பட்ட செலவு என்று ஒரு வாகனத்திற்கு செலவு செய்யப்பட்ட மொத்த தொகை 1,517,455.00 இவ்வளவு செலவு செய்வதற்காக வேண்டி முன்கூட்டி ஏதாவது TEC Report எடுக்கப்பட்டிருக்கின்றதா? இந்த வாகனத்தை பொறுத்தளவில் அதிகமான செலவுகள் செய்யப்பட்டிருக்கின்றது. இதில் இன்ஞின் திருத்தப்படவில்லை, வாகனத்திற்கு முக்கியமானது என்ஞின், ஹைற்றோழிக் இவை எல்லாம் திருத்தப்படாமல் இவ்வளவு காசு செலவளிக்கப்பட்டிருக்கின்றது. இது சம்மந்தமான தெளிவு இந்த சபைக்கு தேவை என்று நினைக்கின்றேன்.

100 பொது நிர்வாகத்தின் கீழ் 19வது சம்மாந்துறை பிரதேச செயலக கிராம சேவகர் நலன்புரிச் சங்கத்திற்கு குடும்ப விபரத்திரட்டு அச்சிட்டு வழங்கிய கொடுப்பனவு. இதில் கொடுப்பனவு கொடுப்பதாக தீர்மானம் எடுத்திருந்தோம். ஆனால் அது சபைக்கு கிடைக்கப்பெற்றதா? என்று தெரியாமல் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எம்.ஏ. தம்பிக்கண்டு அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 600 நலன்புரிச் சேவைகளும், பாதுகாப்புகளும் இதில் 6வது இறைச்சிக்கடைக்கான கொவிட் 19 இற்கான கழிவு இது தொடர்பான விளக்கத்தை இந்த சபையிடம் கோருகின்றேன். அதாவது சபையின் தீர்மானம் இதற்கு எடுக்கப்பட்டிருக்கின்றதா? இதற்கு ஆணையாளர் ஊடாக ஆளநரின் அனுமதி கிடைத்திருக்கின்றதா? என்ற விளக்கத்தை சபைக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் 37வது அப்துல் மஜீட் மண்டபத்திற்கான Stand Fan இரண்டு கொள்வனவு செய்யப்பட்டதாக இருக்கின்றது. விலைமனு கோரப்பட்டு அதற்கான Procedure பின்பற்றப்பட்டு இருக்கின்றதா? என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனக்கு தெரிந்தமட்டில் இங்கு கொள்வனவு செய்யப்பட்டது எல்லாம் Procedure அடிப்படையில்தான் கொள்வனவு செய்யப்பட்டிருக்கும். 300 வெளிப்புறத்திட்டமிடலில் 6வது சபையின் பராமரிப்பின் கீழ் உள்ள பாதைகள் வடிகான்களில் ஏற்படும் திருத்தங்களுக்கு தேவையான கட்டிட நிர்மானப் பொருட்கள் கொள்வனவு செய்த கொடுப்பனவு இது சம்மந்தமாக பரிசீலனை செய்ய வேண்டும். அத்துடன் 200 சுகாதார சேவைகளில் 15வது கொங்கிறீட் பைப் கொள்வனவு அதில் நீள, அகலங்கள் குறிப்பிடப்படவில்லை.

500 பொதுப்பயன்பாட்டுச் சேவையின் கீழ் 8வது பெண்களை வலுவூட்ட வளத்தாப்பிட்டி வில் கழக சங்கத்திற்கான தளபாட கொள்வனவு இதையும் பரிசீலனை செய்ய வேண்டும். அத்துடன் 9வது அதனையும் பரிசீலனை செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 100 பொது நிர்வாகத்தின் கீழ் 25வது பிரதான காரியாலய CCTV Camera கட்டமைப்பு புனர் நிர்மானம் செய்த கொடுப்பனவு. அவ்வாறே 26வது பழைய பிரதேச சபையின் வாகன தரிப்பிடத்திற்கு CCTV Camera பொருத்திய கொடுப்பனவு. இது தொடர்பான தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம். நபீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 100 பொது நிர்வாகத்தின் கீழ் 36வது கட்டிட வேலைகளுக்காக ஆமேச்சர் கொள்வனவு 16,500.00 ரூபா இது தொடர்பாக விலைமனு கோரி செய்யப்பட்டதா? என்று பரிசீலனை செய்ய வேண்டும். மேலும் 45வது Royal Tech இற்கான 03 மாத கொடுப்பனவு ஏன் மாதம் மாதம் கொடுப்பனவு வழங்கப்படாமல் 03 மாதம் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். அத்துடன் 47வது வருமானப் பிரிவிற்கான கணினிகளை திருத்தம் செய்தமைக்கான கொடுப்பனவு அதனையும் பரசீலனை செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தலையங்ம் 200 இன்கீழ் 10வது வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான சீருடை கொடுப்பனவு 237,600.00 ரூபா. இது இந்த வருடத்திற்கான கொடுப்பனவாக இருந்திருந்தால், சென்ற வருடத்திற்கான கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை என்று ஊழியர்கள் அங்கலாய் கொண்டிருக்கின்றது. 2021, 2022 இற்குரிய கொடுப்பனவுகளையும் சீர்செய்து கொடுக்கும்படி கௌரவ தவிசாளர் அவர்களை விணயமாக வேண்டுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 300 வெளிப்புறத்திட்டமிடலின் கீழ் 7வது சென்னல் கிராமம் - 01 சாஹிறா 3வது குறுக்குத் தெருக்கான Surface பாதைக்கான கொடுப்பனவு. இது சபையில் அங்கீகரிக்கப்பட்டதா? என்பதற்கு விளக்கம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வேறு ஏதாவது இருந்தால் கூறுங்கள் இல்லாவிட்டால் ஜனவரி மாத செலவீனங்களில் ஏதாவது கேள்விகள் இருந்தால் கூறுங்கள்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 200 சுகாதார சேவைகளின் கீழ் 4வது கல்லரிச்சல் 2 மடுவத்தைக்கு முன்னாள் உள்ள கல்வெட் நிர்மானக் கொடுப்பனவு இதனையும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 100 பொது நிர்வாகத்தின் கீழ் 9வது கொரிய மொழி கற்பிப்பதற்கான ஆசிரியர் கொடுப்பனவு 37500.00 ரூபா. இது சபையில் தீர்மானிக்கப்பட்டதுதான். இருந்தாலும் கொரிய மொழி கற்பிப்பதன் மூலம் எமது சபை அல்லது மக்களுக்கான அடிப்படை தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றதா? என்பதை நாம் சட்டரீதியாக கவனத்தில் கொள்ள வேண்டும். எங்களது உள்ளூராட்சி மன்ற சட்டதிட்டங்களுக்கு அமைவாகத்தான் நிதிகளை நாம் கையாள வேண்டி இருக்கின்றது. அந்த அடிப்படையில் இந்த விடயத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். அத்தோடு இன்று நான் அவதானித்ததன் பிரகாரம் அனேகமான உறுப்பினர்கள் இந்த கணக்கறிக்கையை பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கருத்து நிலவுகின்றது.

எனது கருத்து என்னவென்றால் கடந்த காலங்களில் சபை இல்லாத காலங்களில் ஏற்பட்ட செலவு சபைக்கான நடைமுறை செலவுகள் வழக்கமானது. அந்த செலவுகள் மீண்டு வரும் செலவீனங்கள். அதனை எக் காரணம் கொண்டும் கட்டுப்படுத்த முடியாது. அதே நேரத்தில் விசேடமாக ஏற்படுகின்ற செலவீனங்களுக்கு நாங்கள் இன்று இந்த சபை அமைந்திருக்காவிட்டால் இந்த செலவுகள் மூலம் சபையின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கான செலவீனங்களை நாம் ஒதுக்கீடு செய்வதில் சபை வேறொரு வழிகளை கையாண்டிருக்கும். ஆனால் இந்த சபை அமைந்ததன் பிரகாரம்தான் இந்த செலவீனங்களை அனுமதிக்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதில் கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்கள் சட்டரீதியாக நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இருக்க வேண்டும் என்பதுதான் எல்லோரினது கருத்தாக இருக்கின்ற படியினால் கௌரவ உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலனை செய்து அதன் பின்னர் தீர்மானம் மேற்கொள்ளப்படுவது சிறப்பானதாக இருக்கும் என்பது எனது பணிவான கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ.ஏ.சீ.எம்.நிசாம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் யூசுப்லெப்பை அவர்கள் சொன்ன மாதிரி நாட்டில் உள்ள பொருளாதார பிரச்சினை காரணமாக அதிகமானவர்கள் வெளிநாடு சென்றிருக்கின்றார்கள். ஆகவே மொழி ஒன்று அவசியம். வேறு வகையான மொழிகள் இருந்தாலும் கற்பிக்கப்பட வேண்டும். ஏற்கனவே கொரிய மொழி சம்மந்தமாக இதுவரையும் எத்தனை மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். தொடர்ச்சியாக கொண்டு செல்லப்படுகின்றதா என்பதை தெளிவுபடுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஜனாசா வாகனத்திற்கு றொலி அல்லது சந்தூக்கு மாதிரி ஒரு அமைப்பு குறிப்பாக பெண்கள் ஜனாசா என்றால் மூடியவாறு கொண்டு செல்லக் கூடியவாறு அமைக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை ஒரு பிரேரணையாக எடுத்துக் கொள்ளுங்கள். சபையின் ஜனாசா வாகனத்திற்கு ஜனாசாவை கொண்டு செல்வதற்காக சந்தூக்கு அமைப்பதற்கு ஒரு தீர்மானம் எடுப்போம்.

**தீர்மானம் - 04/59/20**
எமது சபைக்குரிய ஜனாசா வாகனத்திற்கு றொலி அல்லது சந்தூக்கு அமைப்பதற்கான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ்
ஆமோதித்தவர் : கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கொவிட் 19 காலத்தில் இறைச்சிக் கடைகளுக்கான கொடுப்பனவு சம்மந்தமாக நான் நினைக்கின்றேன் புதிதாக வந்த எங்களது கௌரவ உறுப்பினர்களுக்கு அதன் தெளிவு இல்லாமல் இருக்கின்றது. கொவிட் 19 காலத்தில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஹர்த்தால் தினங்களை கணக்கில் கொண்டு இறைச்சிக்கடை உரிமையாளர்களால் கோரப்பட்ட ஒப்பந்த தொகையின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு எவ்வளவு என்று கணக்கீடு செய்யப்பட்டு, இரண்டு முறை அந்தக் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஏகமனதான தீர்மானம் எடுக்கப்பட்டு கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டு அங்கு இருந்து அங்கீகாரம் கிடைக்கப்பட்டு, அதன் பின்னர் சபையினால் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டு அதற்கு பின்னர்தான் பணம் கொடுக்கப்பட்டது என்று நினைக்கின்றேன். அதற்கு பூரண விளக்கம் தேவை என்றால் அந்த கணக்கறிக்கைகளை பார்க்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்ட அந்த செலவீனங்களை தவிர ஏனைய செலவீனங்களை நாம் அங்கீகரிக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கொரிய மொழி பயிற்சிக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டு அதை தொடர்ந்து கண்காணித்தவன் என்ற வகையில் கூறுகின்றேன். இன்னும் சில மணித்தியாலயங்கள் அந்தப் பயிற்சியை நீடிக்க வேண்டி இருக்கின்றது. அதற்கு சபை அங்கீகாரம் வழங்க வேண்டும். அதை பூர்த்தி செய்வதற்கு சில மணித்தியாலயம் தேவை என்று கூறினார்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எழுத்து மூலம் ஏதாவது ஆவணம் தரப்பட்டிருக்கின்றதா?

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கடிதம் சமர்ப்பிக்கின்றேன் என்று கூறினார். அப்படி ஏற்பட்டால் அதற்கு அனுமதி வழங்க வேண்டும். இந்த சபையில் முடிவு எடுத்து வைத்தால் அந்த மொழியை பூரணப்படுத்திக் கொள்வார்கள்.

**கௌரவ உறுப்பினர் எம்.ஏ.தம்பிக்கண்டு அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தொழில் வாய்ப்பிற்காகத்தான் கொரிய மொழியை கற்க வேண்டி இருக்கின்றது. அந்த மொழியை மாணவர்கள் கற்றுக் கொண்டால் இலகுவாக கொரியாவுக்கு தொழில் வாய்ப்பை பெற உதவியாக இருக்கும். அதற்கு நாம் கட்டாயம் நேரத்தை கூட்டிக் கொடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையின் ஏகமனதான தீர்மானத்தோடு தான் கொரிய மொழி பயிற்சியை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. எழுப்பப்பட்ட கேள்வி என்னவென்றால் அதற்குரிய செலவீனங்கள் எவ்வாறு செலவளிக்கப்பட்டிருக்கின்றது என்பதுதான் கேட்கப்பட்டிருக்கின்றது. இங்கே குறிப்பிட்ட செலவீனங்களுக்கு மேலதிக விளக்கங்கள் தேவை என்பதால் கௌரவ உப தவிசாளரின் தலைமையில் கௌரவ உறுப்பினர் றியாஸ், கௌரவ உறுப்பினர் சிஹாமா, சபையின் செயலாளர், நிதி உதவியாளர் உட்பட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து ஒரு உத்தியோகத்தர் கொண்ட குழுவை அமைத்து மிக விரைவில் பரிசீலனை செய்து சபைக்கு சமர்பிக்க வேண்டும். ஏனைய செலவீனங்களை அங்கீகாரத்திற்காக அனுமதியை கேட்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இரண்டு தடவையாக நாம் இந்த கணக்கறிக்கையை அங்கீகரிக்க வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட 3 அல்லது 4 நாட்கள் கால வரையறை கொடுத்து ஏகமனதாக அங்கீகரிக்க வேண்டும்.

## தீர்மானம் - 04/59/21

2022.12.01 தொடக்கம் 2022.12.31 வரையிலான செலவீனங்களில் தலையங்கம் 100 பொது நிர்வாகத்தின் கீழ் 19வது, 25வது, 26வது, 36வது, 45வது, 47வது, 200 சுகாதார சேவைகளின் கீழ் 2வது LI – 3269 இலக்க வாகனம் தொடர்பாக, 15வது, 300 வெளிப்புறத் திட்டமிடலின் கீழ் 6வது, 7வது, 500 பொதுப் பயன்பாட்டுச் சேவையின் கீழ் 8வது, 9வது, 600 நலன்புரிச் சேவைகளும் பாதுகாப்பின் கீழ் 6வது, 37வது மற்றும் 2023.01.01 தொடக்கம் 2023.01.31 வரையிலான செலவீனங்களில் தலையங்கம் 100 பொது நிர்வாகத்தின் கீழ் 9வது, 200 சுகாதார சேவைகளின் கீழ் 4வது போன்ற செலவீனங்களை கௌரவ உப தவிசாளர் அவர்களின் தலைமையில் கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ், கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து ஒரு உத்தியோகத்தர், சபையின் செயலாளர், நிதி உதவியாளர் கொண்ட குழு இவற்றை ஆராய்ந்து பூரண அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும், ஏனைய செலவீனங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம். நபீல் அவர்கள்:**
சபைக்கு சமர்ப்பிக்கப்படும் கடிதங்கள் மனுக்கள் என்ற விடயத்தில் HW – 4157 இலக்க உழவு இயந்திரத்தின் கிளச் பகுதி, இஸ்டெயரிங் பொக்ஸ், ஹெட் என்பவற்றை திருத்தம் செய்தல். இது தற்போது எவ்வாறு நடைபெறுகின்றது என்றால் Mechanical Engineer என்ன செய்கின்றார் என்றால் அதை பரிசீலித்து சிபாரிசு செய்கின்றார். ஆனால் அவர் இந்த கரேஜ் இல் தான் செய்ய வேண்டும் என்று சிபாரிசு செய்ய இயலாது. சம்மாந்துறையில் பதியப்பட்ட 03 அல்லது 04 கரேஜ் இருக்கின்றது. அந்த 04 கரேஜ் இலும் விலைமனு கோர வேண்டும். ஆனால் Engineer இந்த கரேஜ் இல் தான் செய்ய வேண்டும் என்றால் அவருக்கு அதிகாரம் இல்லை. அதிகாரம் சபைக்குத்தான் இருக்கின்றது. முதல் ஒரு வாகனம் திருத்துவதற்கு அவர் லத்தீப் இன் கரேஜ் இல்தான் திருத்த வேண்டும் என்று பணித்திருக்கின்றார். ஆகவே வாகனம் சம்மந்தப்பட்டதற்கு 04 கரேஜ் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது என்று நினைக்கின்றேன். அந்த 04 கரேஜ் இலும் விலைமனு கோரி குறைவாக இருக்கின்ற கரேஜ் இல் திருத்துவதற்கு தீர்மானம் எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வழமையாக இங்கு ஒரு நடைமுறை இருக்கின்றது. அந்த நடைமுறையை பின்பற்றித்தான் நடைபெற்று இருக்கின்றது. உங்களது கருத்தை கவனத்தில் எடுத்துக் கொண்டு எதிர்வரும் காலங்களில் என்ன செய்யலாம் என்று பார்ப்போம். ஒரு ரூபாய் என்றாலும் பொதுமக்களின் காசு நாம் இங்கும் பதில் கூற வேண்டும். இறைவனிடத்திலும் பதில் கூறவேண்டி இருக்கின்றது. ஆகவே செலவு செய்கின்ற ஒவ்வொரு சதத்திற்கும் சபையில் இருக்கின்ற எல்லாரும் பொறுப்பு கூற வேண்டியவர்கள். அந்த வகையில் இன்ஷா அல்லாஹ் இனிவரும் காலங்களில் இதற்கு முதல் இருந்த நடைமுறைகள் சரியாகத்தான் இருந்திருக்கின்றது. நாங்களும் சபை அங்கத்தவர்களாக இருந்திருக்கின்றோம். நீங்கள் புதிதாக வந்த அங்கத்தவர் உங்களுடைய கருத்தையும் உள்வாங்கி இனிவரும் காலங்களில் சீர் செய்வதற்கு முயற்சி செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே 57வது சபை அமர்விலே நான் ஒரு பிரேரணை சமர்ப்பித்திருந்தேன். ஜனாஸா நல்லடக்கம் செய்வதற்கான காணியை பெற்றுக்கொள்ளல். அதற்காக நாம் அடையாளம்

காணப்பட்ட இடம் ஹிஜ்ரா புரத்திலே இருக்கின்ற பாடசாலைக் காணி. இது சம்மந்தமாக 2023.01.03 ஆந் திகதி சம்மாந்துறை பிரதேச செயலாளருக்கு எமது சபையினால் எழுத்து மூலம் அனுப்பப்பட்டிருக்கின்றது. அதே போன்று சம்மாந்துறை பிரதம நம்பிக்கையாளர் சபைக்கும் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. அதனை பின் தொடர்ந்து அந்தக் காணியை நம்பிக்கையாளர் சபையின் கீழ் அல்லது பிரதேச சபையின் கீழ் கொண்டு வருவதற்கு எங்களாலான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம். நபீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறிய ஹிஜ்ராபுர காணி தற்காலிகமாக நம்பிக்கையாளர் சபையின் கீழ் அந்தக் காணியை தருவது என்று பிரதேச செயலாளரும், வலயக்கல்விப் பணிப்பாளரும் நில அளவையாளரைக் கொண்டு 1 ¾ ஏக்கர் காணி இருக்கின்றது. அந்த எல்லைகளில் சில பிரச்சினைகள் இருக்கின்றது. அதை தற்காலிகமாக நம்பிக்கையாளர் சபைக்கு வழங்குவதாக பிரதேச செயலாளரும், வலயக் கல்விப் பணிப்பாளரும் ஒப்புக்கொண்டு அதனை பாரம் தருவதற்கு நம்பிக்கையாளர் சபை அந்தக் காணியை பராமரிப்பதாகவும், ஒரு காலத்தில் பாடசாலை உருவாகும்போது அந்தப் பாடசாலைக்கு அந்த காணியை வழங்குவதாகவும் தீர்மானித்திருக்கின்றது. ஐமாலியா பாடசாலைக்கு காணி கொடுத்தவர்கள் ஐந்து பேருக்கு பிரதேச செயலாளர் அந்தக் காணியில் கொடுப்போம் என்று கூறினார். நாங்கள் நம்பிக்கையாளர் சபை எதிர்த்தோம். இது பின்னுக்கு தேவைப்படுவது. ஒரு கிராமம் உருவாக்கப்பட்டால் ஒரு பாடசாலை முக்கியம். இதில் கொடுக்காமல் நமது பாம் வட்டையில் காணியை கொடுங்கள் என்று நம்பிக்கையாளர் சபை அதை எதிர்த்து பிரேரணையை பிரதேச செயலாளருக்கு வழங்கியிருக்கின்றது. ஆனால் தற்போது நம்பிக்கையாளர் சபைக்குதான் அந்த காணியை வழங்குவதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நானும் கல்வியின் கீழ் இருந்ததற்காக அந்த காணிக்கு தனி பேமிட். அதில் யாரும் சேர்க்க முடியாது. கௌரவ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் மஜீத் அவர்கள் விசேடமாக ஓரங்கட்ட உசப்பில் இருந்து தான் அதன் எல்லையை காண்பதற்கு Surveyor செல்ல வேண்டும். ஒரு இன்ச் கூட வேறு எந்த நபரும் உரிமை கோர முடியாது. எனவே கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது போன்று குறிப்பிட்ட எல்லைக்குரிய காணியை எடுப்பது மரைக்கார் சபைக்குரிய கடமை. அது ஊரின் சொத்து. வருகின்ற வலயக்கல்விப் பணிப்பாளர்கள் அயலூராக இருப்பதனால் அந்தக் காணியின் பெறுமதி தெரியாது. தற்போது அந்த காணி மிகவும் பெருமதியான இடத்தில் இருக்கின்றது. பெறுமதி வாய்ந்த காணியும் கூட. எனவே நாம் அதனை பாதுகாக்க வேண்டும். தனியார் நிறுவனங்கள் கேட்ட காணிகளை நமது மைதானம் விஸ்தீரமாகப்பட்டு அதில் விளையாட்டுகள் சர்வதேசமாகவோ அல்லது உயர்மட்டத்தில் நடக்கின்ற போது வாகன தரிப்பிடத்திற்கு இடமில்லை. அதை தர வேண்டும் என்று கேட்டு, தற்காலிகமாக அந்த இடத்தை வளைத்து வேலி அமைத்து புல் வளர்க்க வேண்டும்.

பிரதேச செயலாளர் கூறினார் வேளாண்மை செய்கின்ற காணியில் புல் வளர்ப்பதற்கும் அனுமதி இருக்கின்றது என்று, எங்களுக்கு இலகுவாக செய்கின்ற வேலை என்னவென்றால் G3 என்ற புல் வளர்ப்பை செய்தால் விற்பனை செய்யலாம். கடை கட்டக்கூடிய இடத்திலும் புல் வளர்ப்பு நடைபெறுகின்றது. எனவே அந்தக் காணியை எங்களுக்குள் உள்வாங்க வேண்டும். ஏதோ ஒரு வகையில் பயிர்ச் செய்கை திட்டமோ அல்லது தற்காலிகமான புல் வளர்ப்பு திட்டமோ செய்வதற்கு சபைக்கு ஒப்படையுங்கள் என்று கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கின்றது. பலமுறை தனியார்கள் கேட்டு வீரமுனையில் இருக்கின்ற சங்கம் வீரமுனைக்குட்பட்டதால் வீரமுனை விவசாய குழு கேட்டதை ஆரம்பத்தில் தடுத்திருக்கின்றார்கள். நாம் தேவை என்று தான் கேட்டிருக்கின்றோம். சபையில் நாம் சகலதையும் வைத்துக்கொண்டு வேறு ஒருவருக்கு வழங்குவது தேவையில்லை. எங்கோ இருந்து வருபவர்களுக்கு ஹமீடியாஸ் தொழில் கொடுக்கும் போது நாம் இங்கு உள்ளூர் ஆடை உற்பத்திக்காவது கட்டிடம் அமைப்பதற்கு முயற்சி செய்யவில்லை. ஒன்று பள்ளிவாசல் பரிபாலனை சபை செய்ய வேண்டும் அவர்களிடம் அதிகமான நிதி இருக்கின்றபடியினால்.

புதிய திட்டங்களை கொண்டு வந்து அம்பாரை மற்றும் ஏனைய இடங்களுக்கு பெண்கள் செல்வதை தடுத்து முற்போக்கான சிந்தனையாக செய்ய வேண்டும். நாங்களே நேரடியாக சென்று மரைக்கார்

சபையிடம் கதைத்திருக்கின்றோம். உலமா சபையிடம் கதைத்திருக்கின்றோம், அஷ்ஷூறா சபையிடம் கதைத்திருக்கின்றோம் எல்லோரும் ஒருமித்து செய்ய வேண்டும். பள்ளிவாசல் மதில் உடைப்பதும் கட்டுவதுமாக இல்லாமல் கல்வியை முன் நிறுத்த வேண்டும். கல்வியில் தற்போது சில விடயங்கள் பின் தங்கி செல்கின்றது. நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து கல்வி அரசாங்கம் குறிப்பிட்டது தந்தால் அதற்கு மேலதிகமாக நாம் பராமரிக்க வேண்டும். கல்விதான் எங்களது பேச்சும் கல்விதான் எங்களது மூச்சும் என்ற மட்டத்தில் இருந்தால்தான் மூவின மக்கள் வாழ்கின்ற இந்த சமூகம் தலை நிமிர்ந்து நிற்கின்ற ஒரே ஒன்று கல்வி மட்டும் தான். அதே நேரத்தில் இலவசக் கல்வியையும் பயன்படுத்த வேண்டும் நாங்களும் ஊக்குவிக்க வேண்டும். முதல் நாம் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நமது ஊரை பொருத்தமட்டில் அது மிகவும் குறைவு. கல்விக்கூடங்களை ஒரு எதிரி மாதிரி பார்க்கின்ற தன்மை பள்ளிவாசல்களிலும் இருக்கின்றது. போட்டியை தவிர்த்து கல்விக்கு உதவ வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.ஏ.சீ.எம். நிசாம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்தக் கூட்டத்தை பார்க்கின்ற போது பிரதேச சபை கூட்டம் மாதிரி விளங்கவில்லை. ஏனென்றால் பெரிய பெரிய விடயங்கள் எல்லாம் ஆராயப்படுகின்றது. கல்வி சம்பந்தமாக ஆராயப்படுகின்றது, நெல் சம்பந்தமாக ஆராயப்படுகின்றது நல்ல விஷயம். பிரதேச சபையின் பிரதான விடயமாக நான் சில விடயங்களை அடையாளங்கண்டு ஒரு செயற்திட்டமாகத்தான் இதை செய்யலாம். ஒரு சிலவற்றை வாசிக்கலாம் என்று நினைக்கின்றேன். சுற்றாடலை அழகுபடுத்தல் மூலமாக பொருளாதார ஆன்மீக சமூக அபிவிருத்திகளை மேற்கொள்வதுதான் பிரதான நோக்கம். கல்வித் துறையை தனியாகவும், விவசாயத்துறை தனியாகவும் எடுத்தால் ஒரு சிலவற்றைத்தான் எடுக்கலாம். அது இல்லாமல் மொத்தமாக எடுத்தால் டெங்கு தாக்கம், போதைவஸ்து பாவனை, சமூக விரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளது, சிறுவர்கள் நோய்த்தாக்கம், வறுமை, கல்வியில் நாட்டமின்மை போன்ற பல பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்றார்கள். இப் பிரச்சினைகளுக்கு பல்வேறுபட்ட காரணங்கள் செல்வாக்கு செலுத்துகின்றது. இதில் எமது சுற்றாடல் பிரதான பங்கு வகிக்கின்றது. இதை தடுப்பதற்கு எமது ஊரில் உள்ள அனைத்து சமூக நல விரும்பிகளும் முழுமூச்சுடன் செயல்படுவது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் எமது அமைப்பானது 51 கிராம சேவகர் பிரிவுகள் இருக்கின்றது. அதில் முன்மாதிரியாக சில கிராமங்களை தெரிவு செய்ய வேண்டி இருக்கின்றது. இந்த நாட்டில் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சா அவர்கள் சேதனப் பசளையை ஆரம்பித்தவுடன் நான் சந்தோஷப்பட்டேன். அந்தத் திட்டத்தை நான் செயற்படுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் அது நாடு பூராகவும் வடிவமைக்கப்படாத காரணத்தினால் அந்தத் திட்டம் தோல்வியடைந்தது என அறிகின்றேன். ஆகவே எமது ஊரில் 51 கிராமங்கள் அல்லாமல் நான்கு வகையான கிராம சேவகர் பிரிவுகளை எடுத்து அதில் திட்டங்கள் என்னவென்றால் 04 கிராம சேவகர் பிரிவுகளை எல்லையாக கொண்டு அடையாளப்படுத்தி இருத்தல். அதன் நோக்கம் என்னவென்றால் சுத்தமான சூழலை ஏற்படுத்துதல். ஆரோக்கியமான சமூகத்தை கட்டி எழுப்புதல். வேலை வாய்ப்புகளை உருவாக்குதல். ஒழுக்க விழுமியங்கள் கொண்ட இளம் சமுதாயங்களை உருவாக்குதல், வறுமையை நீக்குதல், தங்கி வாழும் நிலையை இல்லாததொழித்தல், வீதி விபத்துக்களை குறைத்தல், குழு செயற்பாடுகள் மூலம் சிறந்த பண்பாடு உள்ள சமூகத்தை உருவாக்குதல், சிறந்த பொழுதுபோக்கு மையங்களை உருவாக்குதல், ஆன்மீக செயற்பாடுகளை மேம்படுத்தல்.

செயற்திட்டம் பாதை, வடிகான் மற்றும் வீட்டுச் சூழலில் காணப்படும் தென்னை மர ஓலைகளை ஒன்று சேர்த்து அரிசி உற்பத்திக்கு பயன்படுத்துவது. பாதை வடிகான், வீட்டுச் சூழலில் காணப்படும் தென்னை மர குற்றிகளை ஒன்று சேர்த்து கைமரஉத்தி விறகுகளுக்கு பயன்படுத்துதல். சுரட்டைகளை ஒன்று சேர்த்து கரி உற்பத்திக்கு பயன்படுத்துதல். தென்னை உரிமை மட்டைகளை ஒன்று சேர்த்து துண்டு துண்டாக நறுக்கி பசளையாக பயன்படுத்துதல். அகற்றப்பட வேண்டிய மரக்குற்றிகள், மரக்கிளைகளை விறகுகளுக்கு பயன்படுத்துதல். கட்டட கழிவுப் பொருட்கள் செங்கள், சீமெண்ட் துண்டுகளை பயன்படுத்தி சீமெந்துக் கல் உற்பத்திக்கு பயன்படுத்துதல், பாதையோரங்கள் அல்லது வீடுகளில் கொட்டப்படும் மாடு, ஆடு எச்சங்களை ஒன்று சேர்த்து பயிர்செய்கைக்கு வளமாக்கி பயன்படுத்தி குப்பைமேடுகளையும் இச் செயற்திட்டத்தில்

பயன்படுத்துதல், தேனீர் சாலைகள் வீடுகளில் கொட்டப்படும் தேயிலை தூள்களை ஒன்று சேர்த்து பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துதல். வெற்று பால்மா பக்கெட், குவளைகள், வெற்று நீர் குவளைகள், பிளாஸ்டிக் கொல்கலன்களை ஒன்று சேர்த்து மரக்கம் உற்பத்திக்கு பயன்படுத்தல், மிக முக்கியமானது பாதை ஓரங்கள் மற்றும் வீடுகளில் காணப்படுகின்றன நிர்மான பொருள் முற்றுப்பெறாமல் இருக்கின்றது. வருடக்கணக்கில் இருக்கும் அப் பொருட்கள் அகற்றப்படுவதில்லை. காபட் வீதிகளிலும், மண் வீதிகளிலும் இருந்து கொண்டிருக்கின்றது. அதை உடனடியாக அகற்ற வேண்டும்.

செயற்திட்டம் அரிசி உற்பத்தி, கைமர உற்பத்தி, விறகு உற்பத்தி, கரி உற்பத்தி, சீமெந்துக்கல் உற்பத்தி, சேதனப் பசளை உற்பத்தி, கொங்கிரீட் தூண்கள், நாற்று மேடைகள், நாற்று கன்றுகள் போன்ற செயற்திட்டம், நிர்மானப் பணிகள் நிறைவு பெற்ற பாதைகள், வடிகான்களுக்கிடையில் பொருத்தமான இடங்களில் புற்தரைகளையும், அலங்கார தரைக்கல்களை பதித்து வேலைத்திட்டங்களை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதீட்டை பெற்றுக்கொண்டு வடிகானுக்கும் பாதைக்கும் இடையில் அரை அடி நிலம் எஞ்சியிருக்கும் அதை மண் இட்டு நிரப்பி புற் தரைகளை உருவாக்கினால் எதிர்காலத்தில் வடிகான், பாதைகள் உடையாமல் இருக்கும். பொருத்தமான இடங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீட்டறிக்கையை பெற்று மரநடுகை திட்டம் போன்றவற்றை மேம்படுத்தி சுற்றாடலை பாதிக்காத வகையில் இயற்கை உணவு உண்ணக் கூடிய கால்நடைகள், பறவைகள் என உற்பத்தி செய்தல். வடிகான்களில் விடப்படும் கழிவு நீர்களை நிறுத்தி நீர்த்தொட்டிகளை நிர்மானித்தல், பூந்தோட்டங்களை உருவாக்குதல், போஷாக்கான உணவுச் சாலைகளை உருவாக்குதல், இச் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு செயற்பாட்டு இல்லங்களாக வெற்றுக் காணிகள், வளவுகளையும் பயன்படுத்தலாம். இது 2019 தொடக்கம் 2021 வரை செயற்படுத்துவதற்கு முயற்சி செய்தோம் அது நடைபெறவில்லை. இதை கவனத்தில் எடுக்குமாறு கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே எமது சபையில் கடந்த டிசம்பர் மாதம் கதைத்த விடயமானது, முஹல்லா மஹல்லா மையவாடியில் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்யப்படுகின்ற போது கபுர்களைத் தோன்டுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளின் பெற்றி செயல் இழந்துள்ளமையினால் அந்த கபுரை மூடாமல் விட்டுச் சென்றுள்ள துர்ப்பாக்கிய நிலை ஒன்று எந்த மய்யவாடியில் நடப்பதாகக் கூறப்படுகின்றது. இது சம்பந்தமாக முன்னால் தவிசாளர் அவர்களிடமும் நான் பேசியிருந்தேன். அந்த நிர்வாகிகளிடம் பேசுவதாகக் கூறியிருந்தார். அது சம்பந்தமான நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளது என்பது தெரியாமல் உள்ளது. அது சம்பந்தமக இந்த சபைக்கு தெரிவிக்குமாறும்,

எமது பிரதேசபையின் ஊடாகவும் எமது வளத்தாப்பிட்டியில் இயங்கிவரும் வில் கழகத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தளபாடங்கள் மற்றும் கட்டடங்களை வழங்கி உதவி செய்திருந்தோம். அந்த வில் கழகத்திற்குத் தேவையான மின்சாரம், நீர் போன்றவை இன்னும் கிடைக்கப் பெறவில்லை அதை எமது சபை மூலம் வழங்கி அவர்கள் தொடர்ச்சியாக இந்த சந்தையை நடாத்துவதற்கு எமது சபை அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று இவ்விடத்தில் கேட்டுக் கொள்கின்னே். எமது சபையின் 2023 ஆம் ஆண்டு பஜ்ஜட்டில் பெண்கள் வலுவூட்டல் என்று அதற்கு ஒரு தொகைப் பணத்தை ஒதுக்கியுள்ளோம். 2023 பெப்ரவரி மாதம் நடை முறையில் இருக்கின்ற படியினால். எமது சபையின் காலம் இன்னும் எவ்வளவு காலம் என்பது தெரியாமல் உள்ளது எங்களுடைய கௌரவ உறுப்பினர்களுக்கு கௌரவ தவிசாளர் உங்களுடைய முயற்சியின் மூலம் இந்த நிதி கிடைக்கின்ற போது அவர்களின் வட்டாரத்தில் இருக்கின்ற தேவையுடையவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்று கேட்டுக் கொள்வதுடன், எங்களுடைய கௌர தவிசாளர், கௌரவ உறுப்பினர்களுக்கு எமது கட்சி சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே இவ்விடயம் மறக்காமல் இருப்பதற்காக ஞாபகமூட்டுகின்றேன். இந்த வருடத்திற்கான வாழ்வாதாரத்தை நாங்கள் ஒதுக்கியிருந்தோம். தற்போது 15 உறுப்பினர்கள் இருக்கின்றோம். எனவே 20 உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்ட வாழ்வாதாரத்தை தற்போது உள்ள

15 உறுப்பினர்களுக்கும் பிரித்து வழங்க வேண்டும். தேர்தலும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதனால் தேர்தல் பணியாகவும் இதனைக் கருதாது எமது இறுதிக் காலத்திற்குள் எமது பிதேசத்தில் உள்ள வாழ்வாதாரம் அற்ற மக்களுக்கு எமது சபையினால் இறுதியாக இந்த வாழ்வாதாரத்தை மட்டும் வழங்குவதற்கு சபையின் ஏகோபித்த உதவியையும் கௌரவ தவிசாளரன் ஆலோசனையையும் வழங்கமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே எமது 04வது சபையின் 59 வது ஒன்று கூடலில் இன்றைய தினம் 2023.02.21 ஆம் திகதி எமது சபைக்கு வருகை தந்திருக்கின்ற மூன்று கௌரவ உறுப்பினர்களுக்கும் இந்த சபையின் சார்பாகவும் இந்த ஊரின் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்தவனாகவும், வாழ்வாதாரம் சம்பந்தமாகப் பேசப்படுகின்றது, ஏனைய அபிவிருத்திகள் சம்பந்தமாகப் பேசப்படுகின்றது எங்களுடைய சபைக்கான நிதி மூலங்கள், நிதி எவ்வளவு இருக்கின்றது என்பதனையும் ஆராய்ந்து, எமது சபைகள் திடீர் என்று கலைக்கப்பட்டாலும் எமது சபையில் தற்காலிகமாகப் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கான நிதியையும் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். அத்தோடு கடந்த டிசம்பர் மாதம் இடம் பெற்ற எமது சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. அதாவது S வாய்க்கால் துப்பரவு செய்யப்பட்டதுடன் எமது முன்னால் கௌரவ தவிசாளர் இராஜனாமா செய்தமமையினால் செலவு செய்வதற்கான அங்கீகாரம் வழங்குவதற்கு யாரும் இல்லாத நிலையில் அது இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. அது முக்கியமான சுகாதார தேவையாக காணப்படுகின்றது. அதை செய்வதற்கு ஆவண செய்ய வேண்டும்.

செந்நெல்கிராமம் 01 மையவாடிக்கு முன்பகுதியில் மலைக்கற்கள் உள்ளமையினால் மழைநீர் வடிந்தோட முடியாத நிலையில் அந்த மலையை உடைத்து துப்பரவு செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அவ்வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. அதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த டிசம்பர் மாதம் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றி விட்டு மேலதிகமானவற்றை எமது நிதி நிலைகளைப் பார்த்து செய்யுமாறு வினயமாகக் கேட்டுக் கொண்டுவனாக, விவசாயிகளின் நெல் விநியோகம் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட கிலோ 100.00 வை ரூபா. 150.00 வாக எடுக்கப்பட வேண்டும் என்று சபையினால் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அரிசி வாங்கிச் சாப்பிடுகின்ற மக்களும் உள்ளனர் இதனால், அவ்வாறு அல்லாமல் ரூபா. 130.00 வாக ஏகமனாதாக தீர்மானம் எடுத்தனுப்புவது சிறந்தது என்று கருதுகின்றேன். கடந்த தங்களது தவிசாளர் பதவித் தெரிவவிற்காக இழுபறிகள் காணப்பட்டது. பல சவாலுக்கு மத்தியில் நாங்கள் தவிசாளரை உருவாக்கினோமென்று கௌரவ உறுப்பினர்கள் பேசியிருந்தார்கள். என்னுடைய அபிப்பிராயப்படி நான் இம்முறை யாருக்கும் வாக்களிப்பதில்லை என்று திடகாத்திரமாக இருந்தேன்.

ஏனென்றால் நடக்க இருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நான் சுயற்சையாக போட்டியிட இருப்பதனால் எந்த ஒரு அரசியல் கட்சி சார்ந்த உறுப்பினருக்கும் நான் ஆதரவு தெரிவிக்க முடியாத நிலையில் இருக்கின்றேன். தேர்தல் கேட்காத வேற்பாளராக இருந்திருந்தால் நான் அந்த நேரம் அதனை பரிசீலனை செய்திருக்கலாம். என்னிடம் அதிகமானவர்கள் வந்து ஆதரவு வழங்கும்படி கூறியிருந்தார்கள். நான் யாருக்கும் ஆதரவளிக்க முடியாது. நான் உங்களுக்கு ஆதரவளித்துவிட்டு உங்களது வட்டாரத்திற்குள் வந்து உங்களுக்கு எதிராக செயற்பட முடியாது. எனவே என்னை மண்னித்துக் கொள்ளுங்கள். இறைவன் யாருக்கு நாடியுள்ளாரோ அவருக்கு அது கிடைக்கும் என்று கூறியிருந்தேன். ஆந்த நேரத்தில் எனது அபிப்பிராயம், கௌரவ தவிசாளர் அவர்களே என்னை மன்னிக்க வேண்டும். தேர்தல் கேட்கின்ற ஒரு வேட்பாளர் தவிசாளர் பதவிக்கு தேர்தல் கேட்கும் நேரத்தில் எவரும் வாக்களிக்க விரும்பமாட்டார்கள்.

அரசாங்கத்தினால் ஒரு காலத்திலும் இல்லாத ஒரு விடயம், சபை கலைக்கப்படாமல் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. அது எல்லோருக்கும் தர்ம சங்கடமான ஒரு சூழ்நிலை. தாங்களாக இருந்தாலும் வேறு ஒரு நபருக்கு விட்டுக் கொடுப்பது என்பது சாத்தியமில்லை. நான் இதனை விமர்சனம் செய்ய வரவில்லை. எனது நிலைப்பாடு உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்திருந்த நிலையில் நான் ஒரு சுயேட்சை வேட்பாளராக இருந்து யாருக்கும் எந்தக்

கட்சிக்கும் வாக்களிக்க முடியாத சூழல்.இதனை பெருமனதுடன் ஏற்றுக்கொண்டு எமது கடந்த டிசம்பர் மாதம் எடுத்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி எமது நிதி நிலைமையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஹிஜ்ராபுர காணி விடயத்தில் எமது சபையும் நம்பிக்கையாளர் சபையும் அதனை கையாள்வதற்கான முயற்சியை செய்கின்றது. எதிர்காலத்தில் அதனை ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான ஒரு மையவாடியாக அதனை எடுக்க வேண்டும். நம்பிக்கையாளர் சபை அதனை குடியிருப்பு நிலமாக மாற்ற வேண்டுமென்று கருதுகின்றனர். இரு வரும் ஒத்து அதனை எதிர்காலத்தில் ஒரு மையவாடியாக கொண்டு வருவது தான் எனது தனிப்பட்ட கருத்து. எனவே இதனை கருத்தில் கொண்டு அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்

கௌரவ தவிசாளர் அவர்களே, கருவாட்டுக்கள் இரண்டில் நூலச்சியன் பரிசாரியார் வீதியில் உள்ள பாலத்திற்கான பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனை செய்வதற்கு ஆணையிடுமாறும் கேட்டுக் கொள்கின்றேன். அத்தோடு ஆலையடி சந்தையின் Founder ஆக இருந்த எங்களுடைய முன்னாள் தவிசாளர் எம். ஏ. அமீர் அலி சேமன் அவர்களுடைய கல்வெட்டு இருக்கின்றது. அதற்குப் பிறகு எமது சபை காலத்திலும் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கான பெயர், கல்வெட்டும் இருக்கின்றது. அதையும் நிர்மாணிப்பதற்கா உத்தரவிடுமாறும் கௌரவ தவிசாளர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே இந்தக் காணி சம்பந்தமாக பேசுவதற்கு நான் மறந்து விட்டேன் உண்மையிலேயே எமது மஹல்லா மஹல்லாவில் ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட 48 ஏக்கர் காணியிலும் ஜனாஸாக்களை அடக்க முடியாது. தற்போது ஜனாஸா அடக்கும் நிலப்பரப்பை பார்த்தால் எனது கணிப்பின்படி இரண்டு அல்லது மூன்று வருடங்களில் நிரம்பி விடுமென நினைக்கின்றேன். கடந்த காலங்களில் இது சம்மந்தமாக பிரதேச செயலாளர் அவர்களிடம் கதைத்துள்ளேன். மலைகள் இருக்கின்ற பகுதியை நீங்கள் பாரம் எடுத்து விட்டு எங்களுக்கு ஜனாஸா அடக்கக்கூடிய வேறு இடம் ஒன்றை தாருங்கள் எனப் பேசியிருந்தேன். அதற்கு அவர் பள்ளி வாசல்கள் சம்பந்தப்பட்டு பேசுகின்ற போது அதனை தரலாம் என்று கூறினார்.

அதிகமான மக்கள் குடியிருப்புக்கான இடமில்லாமல் ஒத்து வீட்டில் வாழ்ந்து வருகின்றனர். அந்த மலைப்பிரதேசத்தில் வீட்டு திட்டங்களை அமைக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளது. ஆனால் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய முடியாது. அதை நம்பிக்கையாளர் சபை பள்ளிவாசல்கள் என்பவற்றுடன் பேசி அதனை பிரதேச செயலகத்திற்கு ஒப்படைத்து அதற்கு பகிரமான ஜனாஸா அடக்கக்கூடிய இடங்களை கண்டெடுப்பது நன்றாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனெனில் கடந்த காலங்களில் எமது சபைகள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் எமது சபையில் இது சம்பந்தமாக பேசவும் இல்லை இதற்கான தீர்மானங்கள் எடுக்கப்படவுமில்லை என்பதை தாங்களும் அறிந்த விடயம்.

அரச காணிகள் மலையடிக்கிராமம் , சென்னல் கிராமம் 1,2, வளத்தாப்பிட்டி ஆகிய நான்கு கிராம சேவகர் பிரிவுகளிலும் காணப்படுகின்றது. இந்த அரச காணிகளை குறிப்பிட்டு உதாரணமாக கூறுவதாக இருந்தால் என்னிடம் குடியிருப்பு காணிகள் கேட்டு வருபவர்களிடம் நான் கேட்ட விடயம் இது சம்பந்தமாக பிரதேச செயலாளரிடம் நீங்கள் அறிவித்ததுண்டா? அப்படி என்றால் அதற்கான முறைப்பாடுகள் இருந்தால் என்னிடம் கொண்டு வருமாறு கூறி இருந்தேன். அவ்வாறு 31 முறைப்பாடுகள் என்னிடம் வந்துள்ளது.

இதன் பின்னர் பிரதேச செயலாளர் அவர்களை இது சம்பந்தமாக அணுகி குடியிருப்பு காணி இல்லாத மக்களுக்கு குடியிருப்புக்காணி வழங்குவது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துள்ளீரா? எனக் கூறியதற்கு அவர் அதற்கு ஆம் என்றார். எல்லா செயற்பாடுகளும்

மேற்கொள்ளலாம் மேல் இடத்திலிருந்து அனுமதியை பெற வேண்டும் என்றார். என்னிடம் இருந்த 31 மக்களின் முறைப்பாடுகளை இணைத்து கடிதம் ஒன்றை நான் மாகாண சபைகள் காணி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியிருந்தென். அதற்கு அவர்கள் பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பி இருந்தார்கள். இதற்கான நடவடிக்கையை செய்து அறிக்கை ஒன்றை வழங்குமாறு கூறியிருந்தார்கள் எனக்கும் பிரதி ஒன்றையும் அனுப்பி இருந்தார்.

அதன் பிறகு பிரதேச செயலாளரிடம் இது சம்பந்தமாக கேட்டதற்கு ஆம் கடிதம் வந்துள்ளது அதற்கான காணி எங்கு உள்ளது காணியை காட்டித் தாருங்கள் என்றார். பிரதேச செயலாளருக்கு நான் காணியை காட்டிக் கொடுப்பதா? நீங்கள் முதலில் கூறியது என்ன மேலிடத்தில் இருந்து அனுமதி வந்தால் செய்ய முடியும் என்கிறீர்கள். இப்போது காணியை காட்டித் தருமாறு கூறுகின்றீர்கள் நான் கூறுகின்ற நான்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள கிராம நிலைதாரிகளை அழையுங்கள் என்று கூறினேன் அவர்கள் காலதாமதம் எடுத்து ஐந்து மாதங்களுக்குப் பிறகு அந்த கிராம சேவையாளர்களை அழைத்தார்கள். நான் காணிகள் இருக்கின்ற இடங்களை கூறி அந்த காணிகள் எங்கே என்று கேட்டதற்கு அந்த காணிகளை அதற்கு முன்னால் உள்ள மக்கள் பிடித்துக் கொண்டார்கள் என்று கூறினார்கள். அந்தப் பிரதேசத்தில் உள்ள கிராம நிலாதாரிகள் இந்த காணிகளை விற்று உள்ளார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் அவர்களே இந்த விடயம் சம்பந்தமாக நாம் தனியாக கதைப்போம். Land use Committee க்கு தவிசாளர் பதவி வழியாக போகும் போது இந்த விடயங்களை கொண்டு போகின்ற போது இது சம்பந்தமாக அங்கு கதைக்கலாம். நாம் இதனை தனியாக கதைப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே நான்காவது சபையின் 59ஆவது கூட்டத் தொடரில் புதிய தவிசாளராக தாங்கள் தெரிவு செய்யப்பட்டதற்காக எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த சபையானது இதற்கு முன் இரண்டு தடவைகள் தவிசாளர் தேர்வு செய்யப்பட்டது. முதலாவது தெரிவானது தேர்தல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டது. இரண்டாவது தெரிவானது ஊர் நம்பிக்கையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டது அண்மையில் ஏற்பட்ட கௌரவ முன்னாள் தவிசாளரின் இராஜினாமா அவரது தனிப்பட்ட காரணங்களுக்காக செய்திருந்தார். அதனைத் தொடர்ந்து சில உறுப்பினர்களும் சேர்ந்து இராஜினாமா இருந்தார்கள். இது எனது முதல் சபை இந்த ஊருக்கான மக்களின் வரிப்பணத்தை கொண்டு செய்கின்ற சேவை பற்றி முன்னாள் கௌரவ தவிசாளர் அயராது சேவையாற்றி அவரால் முடிந்த நடவடிக்கைகளை செய்திருந்தார். அவரை இவ்விடத்தில் ஞாபகப்படுத்தி அவருக்கான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உண்மையிலேயே நான் சந்தோசமடைகின்றேன் தற்போது இருக்கின்ற சபையானது எவ்வாறு தெரிவு செய்யப்பட்டது என்பது எல்லோரும் அறிவோம். நான் இந்த சபையில் இருக்கின்ற ஒரேயொரு UNP உறுப்பினர். இந்த ஊரின் மானம் மரியாதை என்பது காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இங்கு வந்ததன் பயனாகத்தான் இன்று நீங்கள் இந்த சபையின் தவிசாளராகவும், இந்த ஊருக்கு சேவை செய்யக்கூடியவராகவும் உங்களை உருவாக்கியுள்ளேன். இருக்கின்ற இந்தக் காலத்தில் நீங்கள் சிறப்பாக செயல்பட உங்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று கூறிக் கொள்கின்றேன்.

இவ்வளவு காலமும் இந்த சபை தேநீர் உபசாரத்தோடு கலைந்து விடும். இன்று தேநீர் இடைவேளைக்குப் பிறகும் இந்த ஊரின் பிரச்சினையைப் பற்றி பேசுவதற்காக ஒதுக்கப்பட்ட இந்த நாள் பிரயோசனப்படுத்தப்படுகின்றது. அதற்கு உங்களது தலைமையில் இந்த நிகழ்ச்சி நிரல் ஏற்படுத்தப்பட்டமைக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அது மட்டுமல்லாது இவ்வளவு காலமும் ஊடாகவியலாளர்கள் அற்ற சபை நடவடிக்கையே நாங்கள் இங்கு செய்து இருக்கின்றோம். ஆனால் இன்று கிழக்கு இலங்கையில் பிரபல்யமான மூத்த ஊடகவியலாளர் சகோதரர் சலீம் அவர்களது பிரசன்னத்தின் மூலம் இந்த சபை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. அவர்களது வருகைக்கு சபை சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அது மட்டுமல்லாது புதிதாக வருகை தந்த கௌரவ உறுப்பினர்களையும் வரவேற்று கொள்கின்றேன். மேலும் கௌரவ தவிசாளர் அவர்களே நீங்களும் நானும் ஒரே வட்டாரத்தில் இருக்கின்றோம். அண்மித்த இடத்தில் இருக்கின்றோம். இந்த ஹிஜ்றா முதலாம் பாதை என்பது லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிடப்பட்டது. அதன் முடிவான இடத்தில் உடைவு ஏற்பட்டுள்ளது. அது இதுவரை சீர் செய்யப்படவில்லை 2021.10.12 திகதியன்று நான் வழங்கிய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். இதுவரை அது நடைபெறவில்லை அதனை சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, ஹிஜ்றா முதலாம் வீதி முக்கியமான வீதியாக இருக்கின்ற படியினால் தென்னை ஓலைகலாலும் மரங்களினாலும் அதன் இரு பகுதிகளும் மூடப்பட்டுள்ளது. இந்தப் பாதையை சீர்படுத்தி இருளில் மூழ்கியுள்ள வீதிக்கு மின் விளக்குகளையும் பொருத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் முஹல்லா மஹல்லா மையவாடி அப்துல் மஜீட் ஆத்மீக பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனை முன்னெடுத்து மேலும் சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அத்தோடு இன்று அமைந்துள்ள பிரதேச சபையானது தமிழ் மக்கள் அற்ற ஒரு பிரதேச சபையாக உள்ளது. பிட்டும் தேங்காய் பூவும் போல் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இருந்திருக்கின்றோம். இன்று தமிழ் உறுப்பினர்கள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. இது அவர்கள் எல்லோராலும் குழுவாக எடுக்கப்பட்ட முடிவாகும் வேறு ஒன்றுமில்லை. அவர்கள் பிரசன்னமாக இருக்காவிட்டாலும் அவர்களது பிரதேசத்தில் இருந்து வருகின்ற கோரிக்கைகளுக்கு கௌரவ தவிசாளர் அவர்கள் செவி சாய்க்க வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோளாகும். அத்தோடு நெல் நிர்ணய விலை சம்பந்தமாக எல்லோரும் விளக்கங்கள் கொடுத்துள்ளீர்கள். எல்லோரது கருத்தும் பள்ளிவாசல் காணிகள் மூலம் தான் இப்படியான நிகழ்வுகள் நடைபெறுகின்றதென்று கூறப்படுகின்றது. நம்பிக்கையாளர் சபை இந்த குத்தகை விடயத்தில் நீதியாக நடக்க வேண்டும் என்று எமது சபை மூலம் கோரிக்கை விடுக்க வேண்டும்.

அத்தோடு அல்பர் ஜும்மா பள்ளி மையவாடியானது சுற்று மாதில் இல்லாமல் கபூர் ஸ்தானங்கள் கட்டாகாளிகள் மூலம் சிதைவு படுத்தப்படுவதாக அந்தப் பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். இதனை நான் கடந்து சபைகளிலும் வேண்டுகோள் விடுத்துள்ளேன். இதனை செய்து முடிக்க வேண்டும் என்பது எனது தயவான வேண்டுகோளாகும். இந்தப் பிரதேச சபை கூட்டங்களில் ஒலிவாங்கிகள் பல தடவைகள் நிறுத்தப்பட்டு எனது பேச்சை குறுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சபையில் நான் மட்டுமல்ல ஏனைய உறுப்பினர்களும் அமைதியாக தாராளமாக தங்களது கருத்துக்களை முன் எடுப்பதற்கு அனுமதி வழங்கிய கௌரவ தவிசாளருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த புதிய தவிசாளர் இந்த ஊருக்கான செயற்பாடுகளை கட்சி பேதமற்ற முறையில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு விடை பெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ஏ.தம்பிக்கண்டு அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, முதற்கண் முன்னாள் தவிசாளர் அவர்கள் இந்த சபையினுடைய கூட்டங்களை மிகவும் சிறந்த முறையில் நடாத்தி இருக்கின்றார்கள் என்பதை எனக்கு கிடைத்த இந்த மாதாந்த சபை கூட்டறிக்கை கூட்டத்தொடர் 04/58 என்ற பிரசுரத்தை பார்க்கின்ற போது அவர் சிறந்த முறையில் இந்த சபையை நடாத்தி இருக்கின்றார் என்பதை விளங்கக் கூடியதாக இருக்கின்றது. அதில் அநேகமான தீர்மானங்கள் ஏகமானதாக தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அந்த விடயத்தில் அவருடைய ஆளுமை அவருடைய கெட்டித்தனம் இந்த சபையை நடத்தி முடித்திருக்கின்ற ஆற்றலை நான் பாராட்டுவதோடு, அவருடைய காலத்தில் பல சேவைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த சபைக்கான பல வசதி வாய்ப்புகளை அவர் வழங்கியுள்ளார். அதாவது இயந்திரங்கள், தளபாடங்கள், கூட்ட மண்டபங்கள் போன்ற வசதிகளை அவரது காலத்தில் செய்திருப்பது பாராட்டக்கூடிய ஒரு விடயமாக நான் இங்கே குறிப்பிடுகின்றேன். அவர் ஆற்றிய அந்த சேவையின் தொடராக தற்போது அமைந்திருக்கின்ற தவிசாளராகிய நீங்கள் இந்த சபைக்கான சேவைகளை மிக சிறப்பாக செய்ய வேண்டும் என்று முதற்கண் உங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

ஏனைய விடயங்கள் என்ற விடயத்தில் நான் ஒரு சில இந்த சபைக்கான நிறுவனங்களினுடைய தேவைகளை இங்கே கூறலாம் என்று நினைக்கின்றேன். முதலாவதாக ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதி என்ற விடயத்தை ஏற்கனவே பல அங்கத்தவர்கள் சிறப்பாக கூறியிருந்தார்கள். அதனுடைய நிருவாகி அல்லது அதை தற்போது பாதுகாத்து பராமரித்து வருகின்றவர் தன்னுடைய சொந்த இடமாக அதை கருதி சிறப்பாக செய்து வருகின்றார் என்ற பாராட்டும் இங்கே தெரிவிக்கப்பட்டது. அது ஆரோக்கியமான ஒரு பாராட்டாக நான் இங்கே கருதுகின்றேன். இருப்பினும் அந்த விளையாட்டு கட்டிட தொகுதி இந்த சபைக்கு கிட்டத்தட்ட ஒரு லட்சம் தொடக்கம் இரண்டு லட்சம் வரையிலான வருமானத்தை மாதாந்தம் தந்து கொண்டிருக்கின்ற இந்த விடயம் உங்களுக்கு நன்றாக தெரியும். அதனுடைய அந்த சேவை மேலும் இந்த ஊருக்கும் தேவைப்படும் போது அயலவர்களுக்கும் அது உதவ வேண்டும் என்பதற்காக இன்னும் சில வேலைகள் அதில் உள்ள குறைபாடுகளை திருத்தினால் எங்களுக்கு அது இன்னும் கூடுதலான வருமானத்தை பெற்றுத் தரும் என்று நான் நினைக்கின்றேன் அதில் ஒன்று அங்கே உள்ள நீச்சல் தடாகம் இறைக்கப்படும் மோட்டர் நீண்ட காலமாக பாவனையில் இருந்து வருகின்ற காரணத்தினால் அதில் சில தடங்கல்களும் பிரச்சனைகளும் இருக்கின்றது. அது திருத்தப்பட வேண்டும் என்று இந்த சபையிடம் நான் மிகப் பணிவாக கேட்டுக் கொள்கின்றேன்.

அத்தோடு இந்த சபையில் சொல்லப்பட்ட டென்னிஸ் விளையாட்டு மைதானம் சரியான முறையில் அமைக்கப்பட வேண்டும் என்பதில் தவிசாளர் அவர்கள் கூட சுட்டிக்காட்டி இருந்தார். டென்னிஸ் விளையாடுகின்ற மைதானம் சீமென்டாக இருக்கின்ற காரணத்தினால் அதில் விளையாடுவது சிரமமாக இருக்கும். விளையாடும் போது சீமெண்ட் ஆக இருக்கின்ற காரணத்தினால் சறுக்களை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். அந்த இடத்தை காபட் இட்டு கொடுத்தால் விளையாடுவதற்கு பொருத்தமாக இருக்கும் என்ற விடயத்தை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்த ஊரினுடைய மிகப்பாரிய ஒரு குறைபாடாக நான் தெரிந்து கொண்டது, எம்முடைய ஊரினுடைய பல தெருக்கள் இரவில் மின்விளக்குகள் ஒளிர்ந்தாலும் இருள் மயமாகத்தான் இருக்கின்றது. எங்களது ஊரினுடைய இதயமாக இருக்கின்ற சந்தி ஹிஜ்ரா சந்தி அந்த சந்தியைப் பார்க்கும்போது அந்த சந்தியில் இருந்து பிரிந்து செல்கின்ற பாதைகள் எல்லாம் இரவில் இருள்மயமாகத்தான் காணப்படுகின்றது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். உதாரணத்திற்கு நாங்கள் மல்வத்தையின் ஊடாக வருகின்ற போது அங்கே இடப்பட்டு இருக்கின்ற தெரு விளக்குகள் அந்த இடத்தை பிரகாசப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இந்த பெரிய ஊரில் கூடுதலான வருமானத்தை பெறுகின்ற இந்த இடத்தில் ஹிஜ்ரா சந்தி இருள்மயமாக இருப்பது என்பது மன வருத்தப்படக் கூடிய ஒரு விடயமாக இருக்கின்றது. ஆகவே அந்த இடம் நல்ல முறையில் வெளிச்சத்தால் அலங்கரிக்கப்பட வேண்டும் என்று நான் மிகப் பணிவாக இந்த சபையிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

அது மட்டுமல்லாமல் சம்மாந்துறையினுடைய கிழக்கு எல்லை பாலக்கராறு என்று எடுத்துக் கொண்டால் அந்த இடத்தில் இருந்து ஆண்டியர் சந்தி வரை அதாவது பூமரத்து சந்தியின் ஊடாக பழைய மார்க்கெட்டினை குறுக்கறுத்து ஆண்டியர் சந்தி வரை அந்தப் பாதை வெளிச்சம் ஊட்டப்பட வேண்டும். அது போல் பூமரத்து சந்தியில் இருந்து மல்கம்பிட்டி வரையில் போதிய பணம் இல்லை என்றால் அதில் சற்று குறைக்கலாம் அது வரை அந்தப் பாதை ஒளி ஊட்டப்பட வேண்டும். அது போல் நெல்லுப்பிடிச் சந்தியில் இருந்து கோரக் கோவில் ஊடாக கைகாட்டி சந்தியையும் தாண்டி ஆரம்ப நீதிமன்றம் இருக்கின்ற அந்தப் பாதை ஊடாக அம்பாறை வீதி வரை அந்தப் பாதை ஒளியூட்டப்பட வேண்டும். இவ்வாறு பல பாதைகளை நான் அடையாளம் கண்டுள்ளேன் இந்தப் பாதைகள் இருள்மயமாகத்தான் இருக்கின்றது. எல்லோரும் யானையைப் பற்றிய பயத்தை சொன்னார்கள் எங்களது ஊரைப் பொருத்தவரையில் எங்களது ஊரினுடைய கதவு சுற்றாடல் திறந்ததாகதான் இருக்கின்றது. எல்லா பகுதிகளிலிருந்தும் எல்லா மூலைகளில் இருந்தும் யானைகள் ஊருக்குள் வரக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால் இந்த ஊரினுடைய பிரதானமான பாதைகள் எல்லாம் வெளிச்சத்தினால் அலங்கரிக்கப்பட வேண்டும் என்று நான் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன். இது தொடர்பான பாதைகளுக்கான விளக்கங்களை கேட்டால் நான் தனிப்பட்ட முறையில் உங்களுக்கு கூறக்கூடியதாக இருக்கும். நேரத்தை கவனத்தில் கொண்டு எல்லா பாதைகளையும் இங்கு குறிப்பிடவில்லை.

மிக முக்கியமாக நான் கௌரவ தவிசாளர் அவர்களிடத்தில் அன்பான வேண்டுகோளாக கேட்டுக் கொள்வது, தைக்கா பள்ளியின் மையவாடியை சுற்றி இருக்கின்ற பாதை இன்னும் திறக்கப்படாமல் இருக்கின்றது. அதாவது பாதையினுடைய கிழக்கு மேற்கான பாதையில் கொஞ்சப் பகுதி திறக்கப்பட்டு இருக்கின்றது. அதுபோல் மையவாடியினுடைய வடக்கு தெற்கான பகுதியும் கொஞ்சம் பகுதியை திறக்கப்பட்டிருக்கின்றது. இடையில் அது தடைபட்டிருக்கின்றது. அந்தப் பாதை கட்டாயமாக முழுமையாக திறக்கப்பட வேண்டும். காரணம் என்னவென்றால் அந்த மையவாடிக்கு பின்னால் உள்ள இடங்கள் மிகவும் இருள் சூழ்ந்த நிலையில் இருக்கின்றது. அங்கு ஒருவரை கொலை செய்து விட்டு போட்டாலும் உரிய பிரேதத்தை நாற்றம் எடுத்ததன் பிற்பாடு தான் அங்கே கொலை நடந்திருக்கின்றது என்ற செய்தியை அறியக்கூடியதாக இருக்கின்றது. காரணம் மக்கள் நடமாட்டம் இல்லாத இடமாக இருக்கின்றபடியினால் அதை திறப்பதற்கு தவிசாளர் அவர்கள் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்பதை மிகத் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன்.

இதற்கு ஒத்துழைப்பாக தைக்க பள்ளிவாசலினுடைய நிர்வாகத்தோடு கதைக்கலாம் அவர்கள் இந்த பாதையை திறந்து விடுவதற்கு ஆர்வமாக இருக்கின்றார்கள். ஒத்துழைப்பு தர விருப்பமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அது போல் அப்பகுதியில் உள்ள மக்களையும் அழைத்து இந்த விடயத்தை மிக அவசரமாக உங்களுடைய காலத்துக்குள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். காரணம் பல முயற்சிகள் அப்பகுதி மக்கள் முன்னால் இருந்த கௌரவ தவிசாளர் ஊடாக செய்திருக்கின்றார்கள். ஆனால் அந்த விடயம் இன்னும் மக்களுக்கு நிறைவேறவில்லை. அதை நீங்கள் உடனடியாக செய்ய வேண்டும் என்பதை இந்த சபையில் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். புதிதாகத் திறக்க வேண்டிய பாதை இல்லை ஏற்கனவே பிரதேச சபையின் படத்தில் அது பாதையாக அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றது. தனிப்பட்டவர்கள் அந்தப் பாதையை மறித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை தற்போது நாங்கள் வேதனைப்படுத்த விருப்பம் இல்லாவிட்டால் பள்ளிவாசல் நிர்வாகத்தோடு சேர்ந்து அந்தப் பாதையை திறக்க வழி செய்யலாம் என்று நான் ஆலோசனையாக கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் எங்களுடைய அமீர் அலி நூல் நிலையம் மிகவும் பழமை வாய்ந்தது. அந்த நூல் நிலையத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. ஏற்கனவே நூலகராக இருந்த எனது நண்பர் மர்ஹூம் ஆதம்லெப்பை அவர்கள் அந்த நூலகத்தின் வளர்ச்சிக்கு மிகவும் கரிசனை எடுத்து அதனை தன்னுடைய ஒரு கட்டிடம், தன்னுடைய ஒரு சொத்து என நினைத்து அவர் அந்த நூலகத்தை கட்டியெழுப்பினார். தற்போது அவரது சேவையின் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பகுதி என்று சொன்னால் அந்த தமிழ் பகுதியில் உள்ள நூலகங்களில் சிறந்த நல்ல நிலையில் இருக்கின்ற நூலகமாக அமீரலி நூலகம் இருக்கின்றது. அதற்கு மிகவும் காரண கருத்தாக இருந்தவர் மர்ஹூம் ஆதம்லெப்பை நூலகர் அவர்கள். அவருடைய காலத்தில் மாணவர்கள் படிப்பதற்கு Reading Room என்று அக் கட்டிடத்தில் அமைத்துக் கொடுத்திருந்தார். படிக்கின்ற மாணவர்கள் அநேகமானவர்கள் அதனை பயன்படுத்தினார்கள்.

வாசிப்பு அறையில் இருந்து படித்தவர்களில் பலர் பொறியியலாளராகவும், வைத்தியர்களாகவும் பல்கலைக்கழகத்திற்கு சென்றிருக்கின்றார்கள். காரணம் என்னவென்றால் எமது ஊரின் வீட்டு வசதிகள் குடும்ப வசதிகளை பொறுத்தவரையில் தனிமையாக இருந்து படிப்பதற்கு வீடுகளில் இடம் போதாது. இப்படியாக நூலகத்தில் ஒரு வாசிப்பு இடம் ஒதுக்கப்பட்டு இருந்தால் அங்கே அவர்கள் சென்று தங்களுடைய படிப்பை பூரணமாக செய்து கொள்வதற்கு ஒரு வசதி வாய்ப்பாக ஆதம் லெப்பை என்ற நூலகர் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். தற்போது அந்த இடம் Auditorium ஆக மாற்றப்பட்டிருக்கின்றது. தற்போது பிள்ளைகளுக்கு வாசிப்பதற்கு அங்கே இடம் இல்லாத காரணத்தினால் அசௌகரியமாக இருக்கின்றது. அவர்கள் கண்ட கண்ட இடத்தில் இருந்து படிப்பது அசேளகரியமாக இருக்கின்றது. பிள்ளைகள் தொடர்ந்து வாசிப்பது என்றால் இடம் பொருத்தமானதாக இருக்க வேண்டும். அந்த வகையில் எனக்குத் தெரிந்தது அமீரலி நூலகத்தில் Vehicle Parking என்ற ஒரு இடம் இருக்கின்றது. அந்த இடத்தில் குறைந்த செலவில் மாணவர்கள் இருந்து படிக்கக் கூடிய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி ஒரு அறையாக மாற்றிக் கொடுத்தால் மிகப்பெரிய சேவையாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இன்னும் பல தேவைகளை நான் கூறிக்கொள்ளக்கூடியதாக இருக்கும் ஏனைய அங்கத்தவர்களும் சபையில்

அவர்களுடைய ஆதங்கங்களை கூறுவதற்கு ஆயத்தமாக இருக்கின்ற காரணத்தினால் நேர முகாமத்துவத்தை கருத்தில் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய முன்னாள் கௌரவ தவிசாளர் உட்பட எங்களுடைய சக முன்னாள் கௌரவ உறுப்பினர்கள் அவர்களுடைய தக்க காரணத்தினால் வெளியேறி விட்டார்கள். அது இந்த சபையில் எங்களுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. இருந்தும் எங்களுடைய சபையின் வேலைகள் தொடர்ந்து நடக்க வேண்டும் என்று இந்த சபைக்கு பொருத்தமானதாகவும், வேலைகளை விரைவாகவும் செய்யக்கூடிய ஓர் தவிசாளரை தெரிய வேண்டும் என்ற சந்தர்ப்பத்தில் நாங்கள் அதாவது எங்களுடைய கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் அதிகளவு கூறுவார் என்னால் என்னால் என்னால் என்று இந்த கதையை அவர் குறைத்துக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் அது எங்கள் எல்லோரையும் சேர்ந்து பாதிக்கின்றது. எல்லோரும் சேர்ந்துதான் எங்களது கௌரவ தவிசாளர் அவர்களை ஏகமனதாக தெரிவு செய்தோம். மீண்டும் ஒரு தடவை சொல்லுகின்றேன் கௌரவ உறுப்பினர் என்னால் கௌரவ தவிசாளர் தெரியப்பட்டார் என்ற கருத்தை இன்றிலிருந்து நிறுத்த வேண்டும் என்று பணிவன்பாய் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால் கோரம் இல்லாவிட்டால் யாருக்கும் தவிசாளர் வருவதில்லை. 10 பேரும் பொறுப்பாளிகள்தான். நானாக இருக்கலாம் மற்ற உறுப்பினர்களாக இருக்கலாம் இங்கு கட்சி இல்லை. எங்களது முன்னால் தவிசாளர் அவர்கள் இந்த பணிகளை எவ்வாறு இன பேதம் இன்றி ஆண்கள் பெண்கள் என்ற பிரிவினை இன்றி இந்த சபையை கொண்டு சென்றாரோ அவ்வாறான ஒரு மனிதரை நாங்கள் தெரிய வேண்டும் என்பதற்காக எங்களால் தெரியப்பட்ட எங்கள் உள்ளத்தில் தெளிவு வந்தது எங்களது கௌரவ தவிசாளர் மாஹிர் சேர் அவர்கள். எத்தனையோ பேர் வந்து கதைத்தும் கூட நான் இறுதியில் தான் வந்து கௌரவ தவிசாளர் மாஹிர் சேர் அவர்களை தெரிந்தேன். நான் மட்டுமல்ல இங்கு இருக்கின்ற பத்து பேருக்கும் பொறுப்பு ஒருவர் குறைந்தாலும் தவிசாளர் தெரியப்பட்டிருக்க மாட்டார். ஆகவே தயவு செய்து என்னால் என்பதை விட வேண்டும் என்பதை பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சென்ற சபைகளில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. பல தீர்மானங்களில் அதிகமானவைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றது. நிறைவு செய்யப்படாமலும் இருக்கின்றது அதனை எங்களால் முடிந்தால் அந்த தீர்மானங்களை செய்து முடிக்கலாம் என்று நினைக்கின்றேன். இன்னும் ஒரு மாதம் இருக்கின்றது ஆனால் அதற்குள் நாங்கள் தீர்மானங்களை தெட்டத் தெளிவாக எடுத்துக்கொண்டால் அதன் பின் இருக்கின்ற சபையில் இருக்கின்றவர்கள் அதை செய்து முடிப்பார்கள் என்று நினைக்கின்றேன். எங்களுடைய ஊரில் இருக்கின்ற உயர் கல்வி மாணவர்கள் அதிகமான பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தற்போது உயர் கல்வி சகலதும் Online மூலமாக இருப்பதன் காரணமாக இந்த ஊரில் Tower பிரச்சினை அதிகமாக இருக்கின்றது. எமது ஊரில் அமைக்கப்பட வேண்டிய சகல Tower களையும் நாங்கள் அமைக்க வேண்டும். இது எங்களுடைய மக்களுடைய பிற்கால வாழ்க்கையினுடைய அவர்களுடைய சமூகம் அபிவிருத்தி அடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காக தனிப்பட்ட விடயத்திற்காகவும் அல்ல தனிப்பட்ட கோபத்திற்காகவும் அல்ல.

எங்களுடைய அம்பாறை ஒன்பதாம் வீதியில் இருக்கின்ற Tower சகல வேலைகளையும் முடிக்கப்பட்டு இருக்கின்றது. அங்கு இருக்கின்ற மக்கள் அதிகமானவர்கள் Tower செய்ய வேண்டும் என்று கடிதம் அனுப்பி அதற்குரிய கடிதங்களும் இருக்கின்றது. ஆகவே Tower இனை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் அதனால் பிரதேச சபைக்கு வருமானம் வரும் என்பதையும் எண்ணி இதை செய்து கொடுக்குமாறு தயாவுடன் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய இந்த சபையில் கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் சொன்ன மாதிரி எங்களுடைய கதைகளை செவிமடுத்து எங்களுடைய வேலைகளை பொறுப்பாகவே செய்கின்றார் எங்களுடைய கௌரவ தவிசாளர் மாஹிர் சேர் அவர்கள். இது எங்களது சபை நாளைக்கு முடியலாம் அல்லது நாளை

மறுதினமும் முடியலாம் அல்லது ஆறு மாதமும் அதிகரிக்கப்படலாம் இதை தொடர்ந்து செய்வீர்கள் என்று கேட்டுக்கொண்டு எங்களது கௌரவ தவிசாளர் அவர்களையும் கௌரவ புது உறுப்பினர்களாக வந்திருக்கும் கௌரவ உறுப்பினர் நிஷாம் அவர்களையும், கௌர உறுப்பினர் தம்பிக்கண்டு சேர் அவர்களையும், கௌரவ உறுப்பினர் நபீல் அவர்களையும் இந்த சபை சார்பாகவும், இந்த பிரதேச சபை ஊழியர் சார்பாகவும் அவர்களை வரவேற்று அவர்களுடைய பணிகளும் எங்களோடு சேர்ந்து ஒற்றுமையாக செய்வார்கள் என்று என்னி எனது பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனக்கு ஒரு சில நிமிடங்கள் உரையாற்றுவதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டுக்கொள்கின்றேன். இது ஒரு சபை கூட்டம் என்பதால் குறிப்பிட்ட விடயத்தை மாத்திரம் தான் பேசிவிட்டு இருந்தேன். ஆனால் இந்த சபையில் ஒரு சில கௌரவ உறுப்பினர்களின் வாய் வார்த்தைகளுக்கு பிறகு நான் இவ்விடத்தில் சபை உறுப்பினர் அதாவது அரசியல் கட்சி மூலம் சபைக்கு உள்வாங்கப்பட்ட உறுப்பினர் என்ற நிலையில் நான் கதைத்தே ஆக வேண்டும் என்று உண்மையான உறுப்பினராக நான் இவ்விடத்தில் உங்களிடம் அனுமதியை கேட்கின்றேன்.

அதாவது இந்த சபை 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கௌரவ தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட நீங்கள் உட்பட எட்டு உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய கட்சியின் மூலம் அதாவது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து நாங்கள் போட்டியிட்டதனால் ஐக்கிய தேசியக் கட்சி மூலம் சபைக்கு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டோம். இந்த நிலையில் உங்களை இந்த ஆசனத்தில் அமர்த்திப் பார்க்க வேண்டும் என்று எங்களது கௌரவ உறுப்பினர்கள் உட்பட எங்களது கட்சியின் தலைவர், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வரை நாங்கள் முயற்சித்த போது அது ஒரு சில வாக்கு வித்தியாசங்கள் மத்தியில் நீங்கள் கௌரவ தவிசாளராக தெரிவு செய்யப்படுவதற்கு இயலாமல் போய்விட்டது. அந்த நேரத்தில் எங்களுக்கு மிகவும் தாக்கத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தி இருந்தாலும் எங்களுடைய பிரதேச சபைக்கு நாங்கள் தெரிவு செய்யப்பட்ட கௌரவத் தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட முன்னாள் கௌரவ தவிசாளர் அவர்கள் இராஜினாமா நிலை வரும் வரைக்கும் எந்தவிதமான கட்சி பேதங்களோ, பெண் ஆண் உறுப்பினர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் சபையில் கதைப்பதற்கு எங்களுக்கு அனுமதி தந்தார்.

அதே போன்று எங்களது தேவைகள் அதாவது சபை மூலம் நாங்கள் மக்களுக்கு எவ்வாறு சேவைகளை செய்ய வேண்டும் என்று ஆலோசனை விடுத்தாலும் அதனை நூறு வீதம் சரிவர நடத்தாமல் போயிருந்தாலும் கூட குறிப்பிட்ட சேவைகளை சபை மூலம் நடத்துவதற்கு எங்களுக்கு மிகவும் ஒத்தாசை வழங்கினார் என்பதையும் நீங்கள் அறிந்த விடயம். இந்த சபையில் இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிந்த விடயம் என்பதை இந்த இடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். இரண்டாவது முறையாக நாங்கள் கௌரவ தவிசாளர் அவர்கள் இராஜினாமா செய்த போது இரண்டாவது முறையாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஏனைய கட்சிகளும் சேர்ந்து தவிசாளராக தேர்வு செய்தார்கள். அதேபோன்று இரண்டாவது தடவை உப தவிசாளர் தெரிவு நடைபெற்றது. அதிலும் அதிகமான போட்டிகள் வந்தது அதிலும் தவிசாளர் உப தவிசாளர் தெரிவு செய்யப்பட்டார். அதிலும் எந்த விதமான கட்சி பேதங்களும் இல்லாமல் யாருடைய வாய் மூலமாக நாங்கள் தெரிவு செய்த தவிசாளர் எங்களது கௌரவ தவிசாளர் என்ற பேச்சு வார்த்தைகள் இல்லாமல் நன்றாக நடந்த சபை கூட்டங்கள் இனியும் வருங்காலங்களில் சபை கூட்டம் ஒன்று நடந்தால் எந்தவிதமான ஆதரித்த உறுப்பினர்களான கௌரவ தவிசாளர், ஆதரிக்கவில்லை உறுப்பினர்கள் என்ற வாதம் இல்லாமல் சம்மாந்துறை பிரதேச சபையின் கௌரவ தவிசாளராகவும் நாங்கள் கௌரவ உறுப்பினர்களாகவும் நாங்கள் செயல்பட வேண்டும் என்று இவ்விடத்தில் நான் தாழ்மையாக எத்தி வைக்க விரும்புகிறேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது தொழில்நுட்பக் கல்லூரியில் பல பாடத்திட்டங்கள் களவு போகின்றன. ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் நடைபெறுகின்றன. அந்த விடயத்தில் நீங்கள் கௌரவ தவிசாளர் என்ற வகையிலும் இந்த ஊரின் பிதா மகன் என்ற வகையிலும் அதற்கும் ஒரு தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.ஏ.சீ.எம்.நிசாம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊரில் உள்ள பாதைகள் நீர் விநியோகம் செய்வதற்காக அகழி வெட்டப்படுகின்றது. அது வருடக்கணக்கில் நிரப்பப்படாமல் இருக்கின்றது. மூடி இடும் போது அது பணிந்து வெடித்து வாகனங்கள் ஏறி இப்படியாக அதிகமான வீதிகள் பழுதாகி கொண்டிருக்கின்றது. ஆகவே உடனடியாக அதற்குரிய காசு பிரதேச சபையில் செலுத்தப்படுகின்றது அதனை கருதிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஏறத்தாள 58 அமர்வுகள் நடந்து முடிந்து 59ஆவது சபை இன்று நீங்கள் தலைமை தாங்கி இருக்கின்றீர்கள். கடந்த 58 சபைகளிலுமே ஏறத்தாழ 99 சதவீதமான தீர்மானங்கள் ஏகமானதாகவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்த சபைக்குள் எந்தவிதமான அரசியல் யுத்திகளும் இந்த சபை மண்டபத்திற்குள் பிரயோகிக்கப்படவில்லை. சபைக்கு வெளியிலே இருந்தாலும், கடந்த காலங்களிலே நாங்கள் கூடுதலான அபிவிருத்திகளை இந்த சபையின் ஊடாக எமது ஊரில் செய்ய வேண்டும் என்ற எண்ணக்கருவோடு 19 உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக ஒன்றிணைந்தும் கூட தவிசாளரின் விடாப்பிடியான அந்த மிகவும் இறுக்கமான சிக்கனமான நிதிப் பரிமாற்றத்தின் காரணமாக கடந்த காலத்தில் ஏற்பட்ட கோவிட்-19 அதே போன்று பொருளாதார தடை ஏற்பட்டு எரிபொருள் மற்றும் ஏனைய விடயங்களின் விலைவாசிகள் மூன்று பங்குகளாக அதிகரித்த போதிலும் அவற்றை எந்தவிதமான சஞ்சலமும் இல்லாமல் இந்த சபையினுடைய உள்ளக நடவடிக்கைகளையும், சபையினுடைய அத்தியாவசிய சேவைகளையும் செய்வதற்கு மிகவும் உதவியாக இருந்தது. எனவே எமது சபையில் ஏறத்தாழ நான் நினைக்கின்றேன் 30 அல்லது 35 மில்லியன் கையிருப்பில் இருக்கின்றது என்று நினைக்கின்றேன். கூடுதலாக இருக்கின்றதோ தெரியாது எதிர் வருகின்ற காலம் இந்த நாட்டினுடைய நிலைமை இந்த நாட்டினுடைய பொருளாதாரம் நிலைமை எவ்வாறு செல்லும் என்பதை எம்மால் யூகிக்க முடியாது.

எனவே இன்று அல்லது இன்னும் ஒரு மாதத்திலோ கலைந்தாலும் அடுத்த ஒரு வருடத்திற்கான இந்த சபையின் உடைய உள்ளக விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை நாம் செய்து விட்டே செல்ல வேண்டும் என்று நான் வினயமாக கேட்டுக்கொள்கின்றேன். ஏன் என்று சொன்னால் 2021 ஆம் ஆண்டுக்கு முதல் இந்த சபையின் உடைய மாதாந்த செலவீனம் மூன்று தொடக்கம் 3.5 மில்லியனாக இருந்தது இன்று ஐந்து தொடக்கம் ஆறு வரையிலான செலவினங்கள் ஒவ்வொரு மாதமும் சென்று கொண்டிருக்கின்றது. எனவே இவ்வாறு செல்லுமாக இருந்தால் என்னால் யூகிக்கப்பட்ட பணம் 5 அல்லது 6 மாதங்களுக்கு செலவீடு செய்ய முடியும். ஆகவே இன்று இந்த சபையிலே கூடுதலான அபிவிருத்தி திட்டங்களை செய்வதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்பு சபைகளிலும் சில அபிவிருத்தி திட்டங்களுக்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றது. இதிலே அத்தியாவசியமான முக்கியமான தேவைகளை செய்ய வேண்டும். குறிப்பாக கடந்த முறை தவிசாளர் அவர்கள் இராஜினாமா செய்ததன் பின்னர் ஒரு மாத காலம் ஒரு சபையினை தலைமை தாங்கிய எமது கௌரவர உப தவிசாளர் அச்சி முகம்மட் அவர்களது தலைமையிலே ஒரு கூட்டம் நடைபெற்றது.

அந்த கூட்டத்திலே ஏகமனதாக இந்த ஊரின் நகர்ப்புறங்களையும் கிராமப்புறங்களையும் அலங்காரப்படுத்த வேண்டும் என்ற திட்டத்திலே நாங்கள் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான மின்விளக்குகளை கொள்வனவு செய்து இந்த ஊரில் நான்கு பிரதான வீதிகளிலும் பொருத்தினோம். அது உண்மையாக வரவேற்கத்தக்க விடயமாக இருந்தது. இன்று எங்களுடைய அருமை ஆசான் தம்பிக்கண்டு சேர் அவர்கள் கூறிய வகையிலும் மின்விளக்குகளை கொள்வனவு செய்து இந்த ஊரை அழகுபடுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. ஆனால் கடந்த காலங்களிலே இது செய்யாமல் போனதற்கு எமது சபை நிதி நெருக்கடியும் ஒரு காரணமாக இருந்தது. இருந்தாலும் இன்று திருத்த வேண்டிய மின் விளக்குகள் அதிகமாகவே உள்ளது. அவற்றை நாம் அதற்கான மின்விளக்குகளை கொள்வனவு செய்ய வேண்டும். திருத்த வேண்டிய மின் விளக்குகளை உடனடியாக திருத்த வேண்டும் என்ற விண்ணப்பத்தை முன்வைத்து இந்த சபை இவ்வளவு காலமும் ஏதோ ஒரு வகையில் ஒருமித்த குரலோடு பயணித்தது. இன்ஷா அல்லாஹ் இன்னும் இருக்கின்ற காலம் அவ்வாறான தீர்மானத்தோடு இந்த சபை இட்டுச் செல்ல வேண்டும். இலங்கையிலே உள்ள நான் நினைக்கின்றேன் 341 உள்ளுராட்சி மன்றங்களிலும் ஐந்து வரவு செலவு திட்டங்களும் ஏக

மனதாக தீர்மானிக்கப்பட்ட ஒரு சபையாக இருந்தால் சம்மாந்துறையாக தான் இருக்கும். ஆகவே ஒற்றுமை இந்த சபை மண்டபத்திற்குள் கடைபிடிக்க வேண்டும் என்பதை கௌரவ உறுப்பினர்கள் அனைவரிடமும் விணயமாக வேண்டி விடை பெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் நீண்ட காலமாக இந்த சபைக்கு முன் வைத்திருக்கின்ற ஒரு பிரச்சினை. அது எனக்கு நினைவுக்கு வந்தது. இன்று இந்த சம்மாந்துறை ஒரு பாராளுமன்றத்தை இழந்த நிலையில் இருக்கின்றது அதனால் தேசிய கட்சியோடு இணைந்திருக்கின்ற கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களும் நானும் இந்த சபைக்கு முன் வைக்கின்ற பிரேரணைகள் பிரச்சினைகள் கொண்டுவருகின்ற அனைத்தும் ஊர் அடிப்படையில் விசாலமாக ஒரு தூரநோக்கோடு தான் கொண்டு வருகின்றோம். அந்த விடயத்தில் எனக்கும் அவருக்கும் ஒற்றுமையான நடவடிக்கைதான் இருக்கின்றது. அதை செயல் ஊடாக அறியலாம். அந்த அடிப்படையில் ஜமாலியா பாடசாலையின் அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்கின்ற ஒரு சில சில குறைபாடுகளை முன்வைத்து, அவர் நீண்ட நாட்களாக இந்த சபையின் நேரத்தை எடுத்து இருக்கின்றார். ஆகவே கல்வி துறையில் நாங்கள் அமைச்சின் ஊடாக அந்த இடமாற்றத்திற்கு நாங்கள் நேரடியாக முன்னெடுக்க முடியாமல் விட்டாலும் ஊரின் அடிப்படையில் இருக்கின்ற அனைத்து அதிகாரங்களும் எங்களது கையில் தான் இருக்கின்றது.

ஆகவே அந்த அதிகாரத்தின் தோரணையில் உண்மையான விடயங்களை விளங்கி என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றது என்பதை ஆராய்ந்து அதற்காக அந்த பாடசாலை அதிபரை பழிவாங்குவது என்ற அர்த்தம் இல்லை. SWDC உறுப்பினர்களும் மாணவர்களின் பெற்றோர்களும் என்ற அடிப்படையில் பல பிரச்சினைகள் அவரால் முன்வைக்கப்பட்டது அதற்கு மீள நடவடிக்கைகளை உற்றுநோக்கி நமது சபையின் அதிகாரத்திற்குட்பட்ட வகையில் யோசனை முன் வைத்தால் அவர் நீண்ட நாள் எடுத்த முயற்சிக்கு மன ஆறுதலை கொடுக்கும் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் நாங்கள் தேசிய அரசியலோடு இருக்கின்ற படியினால் தான் கௌரவ அஸ்பர் அவர்கள் கூட பல கோடி ரூபா பெறுமதியான வேலை திட்டங்கள் செய்திருக்கின்றார். அதே நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி என்ற ஒரே ஒரு காரணத்திற்காகத்தான் நானும் பல கோடி ரூபாய் வேலைத்திட்டங்களை செய்திருக்கின்றேன். அதற்காக மற்றவர்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை. குறையும் கூறவில்லை நாங்கள் தேசியக் கட்சியினூடாக இணைந்திருந்ததால் ஏனைய உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் தன்னுடைய கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் தான் நிற்க வேண்டும்.

என்னை பொருத்தமட்டில் 14ஆம் திகதிய நிகழ்வானது கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கேட்டுக்கொண்டார் என்னால் தான் முடிந்தது என்ற வாதத்தை வைக்க கூடாது என்பது, நான் உண்மையாக என்னால் நான் என்ற சொல்லுக்கு நான் அருகதையற்றவன். அது அல்லாஹ்வுக்குரிய விஷயம். ஆகவே மீண்டும் நான் இவ்விடத்தில் உறுதிப்படுத்துகின்றேன் 10 பேர் 50 வீத உறுப்பினர்கள் இல்லாத பட்சத்தில் சபையும் இருந்திருக்காது கௌரவ தவிசாளர் அவர்களும் தெரிவு செய்திருக்க முடியாது. அதுதான் என்னுடைய வாதம் அந்த இடத்தில் கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களோடு காலையில் சம்பாசனம் செய்தேன். சந்தித்த நேரத்தில் நாங்கள் இரண்டு பேரும் பேசிக் கொண்டோம். அந்த அடிப்படையில் தான் நான் இந்த ஊரின் மானம் மரியாதையை காப்பாற்ற வேண்டும் என்ற நிலை ஏற்பட்ட கூட்டம் என்பதையும் சபை நீடித்தாலும் நீடிக்காவிட்டாலும் இதுதான் உண்மை நிலை, இதுதான் எதார்த்தம், இதுதான் ஊர் மக்களும் விரும்புகின்றது அதைத்தான் நாங்கள் செய்தோம். வேறு யாருக்கும் இல்லை எந்த கட்சிக்கும் இல்லை நான் யாருடைய ஆதரவாளனும் இல்லை. நான் இந்த சபையில் உரையாற்றி இருக்கின்ற நேரத்தில் எனது கட்சியின் தலைமை செயலகத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. உரிய காலம் முடிந்துவிட்டது கட்சிக்குரிய உறுப்பினர் இருவரை நியமிக்க வேண்டும். ஆகவே உடனடியாக உறுப்பினர்களை இனங்கண்டு அனுப்பி வையுங்கள் என்று கட்சியிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. மேலும் இந்த கூட்டம் அடுத்த மாதத்தில் நீடிக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாக இரண்டு உறுப்பினர்கள் சபையிர் அமர்வார்கள் என்பதை மிகவும் சந்தோசத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் நாங்க நாங்கள் என்று என்னையும் சேர்த்துக் கொண்டு போகின்றார். நான் கடந்த ஒரு வருட காலமாக சுயாதீனமாக இயங்குவது என்று பிரபல்யமாக இந்த சபையில் உறுப்பினர்கள் மத்தியில் பேசிவிட்டேன். நான் எந்த கட்சியும் இல்லை அதனால் தான் சுயேட்சையாக தேர்தல் கேட்கின்றேன்.

அடுத்ததாக ஐமாலியா பாடசாலை தொடர்பாக தீர்க்கமான முடிவு கிடைத்து ஒரு முடிவுக்கு வந்து தற்போது மாணவர்கள் பாடசாலை செய்கின்றார்கள். அதற்குரிய முடிவு எடுத்து விட்டோம். இனிமேல் நாங்கள் நாங்கள் பிரதானமான கட்சி என்ற வசனத்தை விட்டு நீங்கள் என்ற வசனத்தை மட்டும் பேசுங்கள். அதை வினையமாக கேட்டுக்கொள்கின்றேன். நாங்கள் நாங்கள் என்று பேசுவதனால் என்னை பொருத்தமட்டில் என்னை விமர்சனம் செய்கின்றார்கள். நான் ஒரு மொட்டுவின் பிரதி விம்பம். மொட்டுவின் ஆதரவோடு வந்திருக்கின்ற Football சின்னம் என்ற அமைப்பில் JVP தலைவர் முநூலில் பதிவுசெய்திருக்கின்றார். அது பரவலாக பேசப்படுகின்றது. எந்த கட்சியோடும் நான் உடன்படிக்கை வைக்கவில்லை. இது சம்மந்தமாக முச்சபைகளுக்கும் கடிதம் அனுப்பி இருக்கின்றேன் என்னுடைய பெயரை டிமோஜ் பண்ணுவதற்கான வேலைகள் நடந்து இருக்கின்றது. மக்கள் மத்தியில் முச்சபைகள் முன்னிலையில் சத்தியமொன்று செய்ய வேண்டும் என்ற ஒரு கடிதம் அனுப்பியதற்கு அமைவாக சத்தியம் கேட்பவரின் பெயரை கேட்டு இருக்கின்றார். புஹாரி அவர்களின் பெயரை கொடுக்கப்பபோகின்றேன். தயவு செய்து நாங்கள் நாங்கள் இன்று தேசிய கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் 59 அமர்வுகள் ஏகமனாதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்று கூறினார்கள். நான் 2011 ஆம் ஆண்டில் இருந்து வருகின்றேன். 109 கூட்டங்களும் ஏகமனதாகத்தான் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இனிமேலும் ஊரின் ஒற்றுமைக்காக ஒத்துழைப்போம் என்ற கோசத்தோடு பயணிப்போம் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

அனைத்து கௌரவ உறுப்பினர்களும் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்தார்கள். கட்சி அரசியல் பேதங்கள் எல்லாம் சபைக்கு வெளியில். சபை என்று வருகின்ற நேரம் எல்லா உறுப்பினர்களும் ஒரு குழுவாகத்தான் இதுவரை காலமும் இயங்கி வந்திருக்கின்றோம். இனிவரும் காலங்களிலும் அவ்வாறு தான் இயங்க வேண்டும். ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியில் தீர்மானம் எடுக்க வேண்டிய அரசியல் உரிமை இருக்கின்றது அதை யாரும் மறுக்க முடியாது நாங்கள் அவர்களுடைய முடிவு எங்களுடைய விருப்பத்திற்கு மாறாக இருந்ததற்காக அவர்களை நாங்கள் எதிரியாகவும் பார்க்க முடியாது. அது அவரவர் அரசியல் உரிமை. இந்த சபையை நாங்கள் இதுவரை காலமும் நடந்தது போல இனிவரும் காலங்களிலும் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு,

முக்கியமான சில அறிவிப்பு செய்ய வேண்டியிருக்கிறது மஹல்லா மஹல்லா மையவாடி இருக்கும் இடம் தற்போதும் கூட வெளியூரில் இருந்து வருபவர்களுக்கு தெரியாமல் இருக்கின்றது. மல்காம்பிட்டி வீதியில் மஹல்லா மஹல்லா மையவாடி இருக்கும் இடத்தை அடையாளப்படுத்துவதற்காக தேவையான இடங்களில் போடுவதற்கு உங்களுடைய அனுமதியை கேட்கின்றேன்.

**தீர்மானம் - 04/59/22**

முஹல்லா மஹல்லா மையவாடியினை ''மர்ஹூம் அப்துல் மஜீட் ஆத்மீக பூங்கா – முஹல்லா மஹல்லா மையவாடி'' என பெயரிடவும், மல்காம்பிட்டி வீதியில் அப்துல் மஜீட் ஆத்மீக பூங்கா - மஹல்லா மஹல்லா மையவாடியினை அடையாளப்படுத்துவதற்காக தேவையான இடங்களில் பெயர்ப்பலகை இடுவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

அடுத்ததாக சம்மாந்துறை அறுவடை காலம் என்பதனால் அநேகமான விவசாயிகள் கஷ்டத்தில் இருக்கின்றார்கள். மழை காரணமாக அவர்களுடைய நெல்லை காய வைப்பதற்காக பாதைகளை பயன்படுத்துகின்றார்கள். அதற்கு நாங்கள் ஒரு அறிவித்தல் ஒன்று சகல பள்ளிவாசல்களில் கொடுக்க வேண்டும். அறுவடை காலங்களில் பாதசாரிகளுக்கும், வாகன சாரதிகளுக்கும் ஏற்படும் அசோகரியங்களை கவனத்தில் கொள்ளாது விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்று பள்ளிவாசல் மூலம் ஒரு அறிக்கை கொடுக்க வேண்டும் என்றும,

அடுத்ததாக நாளை 22 ஆம் திகதி வாசிப்பு மாதத்தை முன்னிட்டு எமது அலுவலகத்தில் நிகழ்ச்சி ஒன்று இருக்கின்றது. கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பிதழ் தரப்பட்டிருக்கின்றது. அதிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டி, இவ்வளவு நேரமும் காத்திரமான உரைகளை ஆற்றிய உறுப்பினர்கள் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இங்கே உள்வாங்கப்பட்டிருக்கின்றன. அதற்குரிய நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறி, இன்னும் ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் எங்களது நிகழ்ச்சிகளை கவரேஜ் செய்வதற்காக வந்திருக்கின்ற இந்த பிராந்தியத்தின் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்ள வேண்டும். எங்களைப் போலவே அவர்கள் அவர்களது வேலைகளை விட்டுவிட்டு இங்கு வந்து இவ்வளவு நேரமும் எங்களது நிகழ்ச்சிகளை அவதானித்து சிரேஸ்ட ஊடகவியலாளரான எங்களுடைய நண்பர் சலீம் நண்பர் சகாப்தின் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டு தொடர்ந்தும் உங்களது ஆதரவு எங்களுக்கு கிடைக்க வேண்டும் என்றும், இங்கே தெரிவிக்கப்பட்ட கருத்துகள் மக்களை சென்றடைய வேண்டும் என்றும் கூறி, இத்துடன் சபை அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

I.L.M.மாஹிர்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
Tel No : 067 2260178
Fax : 067 2260178
Email : strps2009@yahoo.com

கௌரவ தவிசாளர்
கௌரவ உப தவிசாளர் / கௌரவ உறுப்பினர்
சம்மாந்துறை பிரதேச சபை.

**கூட்டறிக்கை அனுப்புதல்**

கடந்த 2023.02.21 ஆந் திகதி இடம் பெற்ற எமது 04வது சபையின் 59வது அமர்வின் கூட்டறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருக்குமாயின் எதிர்வரும் 2023.03.08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

I.L.M.மாஹிர்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
Tel No : 067 2260178
Fax : 067 2260178
E.mail : strps2009@yahoo.com